தனிப்பிரதி விலை அணா 0—1—6.
Reg. No. M. 3066. 1936-ஜூன் 1.
PAHUTHARIVU ("REASON")
மலர் II. இதழ் 2.

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் சிறந்த மாத வெளியீடு.

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள்நாடு ரூ.	1—0—0.	வெளிநாடு ரூ.	1—8—0.
தனிப்பிரதி	0—1—6.	தனிப்பிரதி	0—2—6.

சந்தாதாரர்களுக்கு

பகுத்தறிவுக்கு மே மாதமே வருட ஆரம்பமானதாலும் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜூலை மாதம் முதல் இருந்துதான் பத்திரிகைகள் அனுப்பப்படும்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிட வேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும்போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை. பக்கம்.

எச்சரிக்கை (பாட்டு) 1

இந்து மதமும் மனுஸ்மிருதியும். (ஸ்ரீ நாசுவாமி) 2

மனம் அல்லது மனசு (ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்.) 9

பகுத்தறிவும் சமயமும். (டாக்டர், ஆர். பி. பராஞ்சிபை) 14

யோகி, (கதை) (ஜே. பி. கிருஷ்ணன்) 19

கடவுள் செயல் 31

வேதம் அல்லது பைபில் விதிகள் 40

ஆண் பெண் சமத்துவம் 48

கண்டறிந்த உண்மை (ஜி. இங்கர்சால்) 56

மாதர் முன்னேற்றத்துக்கு மதம் முட்டுக்கட்டை (பி. வரக்ராபாய்) 61

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 2. } ஈரோடு 1936 ஜூன் 1. { இதழ் 2.

எச்சரிக்கை.

(காமி சத்தியபாமா என்ற மெட்டு.)

ஏமாந்திட வேண்டாம் இந்தியத் தோழரே!
தோழரே தோழரே தோழரே-இன்னும் (ஏமா)

1. சாமி கிருபை யென்று தவமிருந்தே யுழன்று
சேமித்த தன்மை பூஜ்ஜியம்
பூஜ்ஜியம் பூஜ்ஜியம் பூஜ்ஜியம்-இன்னும் (ஏ)

2. கோவில் குளங்களாலே கொள்ளை போச்சானதாலே
ஆவி சோர்ந்தின்று நைகிறோம்
நைகிறோம் நைகிறோம் நைகிறோம்-இன்னும் (ஏ)

3. சடங்குகளாலித்தேசம் சார்ந்தது சர்வநாசம்
மடங் கொண்ட வாழ்க்கை போதுமே
போதுமே போதுமே போதுமே-இன்னும் (ஏ)

4. கர்மம் தலையெழுத்து கஷ்டம் முளைத்த வித்து
மர்ம மறியா திழிந்தோம்
இழிந்தோம் இழிந்தோம் இழிந்தோம்-இன்னும் (ஏ)

5. சொந்த மதியிழந்தோம் சூழ்ச்சி நம்பத்துணிந்தோம்
வந்தபல னடிமைதான்
அடிமைதான் அடிமைதான் அடிமைதான்-இன்னும் (ஏ)

இந்துமதமும், மனுஸ்மிருதியும்.

(ஸ்ரீ தாசுவாமி எழுதுவது.)

மதம் என்றால் கொள்கை என்று பொருள். மனிதர்கள் தங்களுடைய ஜீவிதத்தை புனிதமாகச் செய்து, இன்பத்துடனும் அன்புடனும் சுகஜீவிகளாக வாழவேண்டுமென்ற நோக்கத்துடனே தான் கொள்கை என்னும் மதங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். மனிதர்களுக்காக மதமேயன்றி, மதத்திற்காக மக்கள் ஏற்படவில்லையென்பது உண்மை. மதங்களின் பெருமையும், சிறுமையும், அவைகளின் கொள்கைகளை பொருத்திருக்கும். சமத்துவம், சகோதரத்வம், சத்யம், சம உரிமை, அன்பு, பரோபகாரம் முதலான மனிதத்தன்மைகளைக் கற்பிக்கும் மதங்களை ஒருவரும் ஒரு போதும் குற்றஞ் சொல்லமாட்டார்கள். பிறப்பில் உயர்வு தாழ்வுகளையும், ஜாதி பேதங்களையும் கற்பித்து ஒற்றுமையைக் கெடுத்து தீண்டாமை, நெருங்காமை, பார்க்காமை முதலான பேதத்தை விர்த்தி செய்து மூடக் கொள்கைகளை பரப்பி மக்களின் அறிவைக் கெடுத்து மனிதர்களை மனிதர்கள் அடிமைப் படுத்தும் மாதிரியான மதங்கள் ஒரு போதும் மதங்களாகா. அவைகளை அறிவாளிகள் அங்கீகரிக்கவும் மாட்டார்கள். அத்தகைய மதங்கள் இருந்து உலகத்தைக் கெடுப்பதைவிட, இல்லாமலிருப்பதே மேல். உலகில் கிறிஸ்து மதம், மகமதிய மதம், புத்த மதம் முதலான அநேக மதங்கள் இருக்கின்றன. இம் மதங்களை ஏற்படுத்தினவர்கள் இன்னார்களென்றும், இன்ன காலத்தில் ஏற்படுத்தினார்களென்றும் ஒரு வகையில் தெரியக் கிடக்கின்றன. இந்து மதத்தை எடுத்துக்கொண்டால் அது எந்தக்காலத்தில், யாரால் ஏற்படுத்தப்பட்டதென்று அறிய முடியாது. ஆனதுபற்றி அது 'அனாதி' என்றும் 'அபௌருஷேயம்' என்றும், சொல்லப்படுகின்றது. (அனாதி - முதன்மையற்றது) (அபௌருஷேயம்—புருஷர்களால் (மனிதர்களால்) சிருஷ்டிக்கப்படாதது.) முதன்மையில்லாததும், மனிதர்களால் சிருஷ்டிக்கப்படாததும் ஆகிய மதமே இந்து மதம். இது 'சனாதன தர்மம்' என்றும் சொல்லப்படுகிறது. இவ்

வண்ணம் காலவரையில்லாததும், கர்த்தனில்லாததும் ஆகிய இந்துமத சனாதன தர்மத்தை அறிவிக்கும் சாஸ்திரங்கள் அநேகமுண்டு. அந்த சாஸ்திரங்களை எடுத்துப் பார்த்தால் அது சிவனால் சொல்லப்பட்டதென்றும், விஷ்ணுவால் சொல்லப்பட்டதென்றும், பிரமனால் சொல்லப்பட்ட தென்றும், கடவுளால் சொல்லப்பட்ட தென்றும், ரிஷிகளால் சொல்லப்பட்ட தென்றும் சொல்லி யிருக்கின்றன. ஆகையால் அத்தகைய புத்தகங்கள் கடவுள் வாக்கென்றும் கற்பந்திக்கப்பட்டிருக்கின்றன. அதில் சிரேஷ்டமானதும், முதன்மையானதும் மனுதர்ம சாஸ்திரமாகையால் மனுஸ்மிருதியில் கடவுள் சொல்லியிருக்கும் சில சுலோகங்களின் கருத்தை இங்கு எழுதுகிறேன். இதை நேயர்கள் கவனிப்பார்களாக.

மனுஸ்மிருதி அத்தியாயம் 1. சுலோகம். 31. "உலகாபிவிருத்தியைக்கருதி பிர்மாவானவர் தம் முகம், தோள், தொடை, காலென்றநான்கு அவயவங்களிலிருந்தும் முறையே முகத்திலிருந்து பிராமணனையும், தோளிலிருந்து க்ஷத்திரியனையும், தொடையிலிருந்து வைசியனையும், காலிலிருந்து சூத்திரனையும் சிருஷ்டித்தார்" (பஞ்சமர்களையும் ஸ்திரீகளையும்எதிலிருந்து சிருஷ்டித்தாரோ)

அ. 1 சு. 86. "கிருத யுகத்தில் தபசும், திரேதாயுகத்தில் ஆத்ம ஞானமும், துவாபரயுகத்தில் யக்ஞம் (யாகம்) முதலானதும், கலியுகத்தில் (பிராமணர்களுக்கு) தானம் கொடுப்பதையும் சிரேஷ்டதர்மமாக விதிக்கப்பட்டிருக்கிறது"

சு. 87. "பிர்மாவானவர் தம் முகம், தோள் தொடை, கால் இவைகளிலிருந்து சிருஷ்டிக்கப்பட்ட பிராமணர் முதலான ஜாதிகளுக்கு வெவ்வேறாக கர்மங்களை சிருஷ்டித்தார்'

சு 91. "அதில்சூத்திரர்களின் தர்மம் என்னவென்றால், பிராமணர்களுக்குப்பணிவிடை செய்வதும், அவர்களுக்கு அடிமையாயிருப்பதுவும், மிகவும் மோக்ஷத்திற்கு ஏது கரமென்று கருதி அதை சிருஷ்டித்தார். அதுவும் அசூயையின்றி செய்ய வேண்டும்"

சு. 92, 93. "புருஷ சரீரம் பரிசுத்தமாயிருக்கிறது. அதில் நாபிக்கு மேல் பாகம் அதிக பரிசுத்தமானது. ஆகை

யால் பிர்மாவின் முகம் அதிலும் அதிக பரிசுத்தமாயிருக்கிறது. பிர்மாவின் முகத்திலிருந்து ஜனித்ததாயிருப்பதாலும், மற்ற ஜாதிகளுக்கு தர்மத்தை உபதேசிக்க வேண்டியிருப்பதாலும், வேதத்தை தரிப்பதாலும் இவ்வுலகில் பிராமணன் கடவுள் ஆகிறான்'

சு. 94. "சுவயம்புவாகிய பிர்மாவானவர், தேவர்களுக்கும், பிதுர்க்களுக்கும், யாகம் சிரார்த்தம் முதலானவைகளைச் செய்து மற்றுள்ள ஜாதிக்காரர்களுக்கு மோக்ஷத்தை அளிப்பதற்காக தன் முகத்திலிருந்து முதலில் பிராமணனை சிருஷ்டித்தார்"

சு. 95. "பிராமணனால் சொல்லக் கூடிய மந்திரத்தின் பலத்தினால் தேவர்களும் பிதுர்க்களும் பரிபூரணத்திருப்தியை அடைகின்றனர். ஆகையால் பிராமணனைவிட உயர்ந்தவர்கள் இவ்வுலகில் ஒருவருமில்லை"

சு. 96. "உலகிலுள்ளபொருள்களில் பிராணனுள்ளபொருள்கள் சிரேஷ்டம், அதில் அறிவுடன் ஜீவிக்கும்பசுமுதலான பிராணிகள் சிரேஷ்டம், அதிலும் மனிதர்கள் சிரேஷ்டம்; மனிதர்களுக்குள் பிராமணர்கள் சிரேஷ்டமானவர்கள்"

சு. 100. "பிராமணன் எல்லாஜாதியிலும் உயர்ந்தவனாகையாலும், பிர்மாவின் முகத்தில் ஜனித்ததினாலும் இவ்வுலகத்திலுள்ள எல்லாஜாதிக்காரர்களின் சொத்தையெல்லாம் கொள்ளையடிப்பதற்கு அர்ஹனாகிறான். (உரிமையுடையவன்")

சு. 101. "ஆகையால் ஒரு பிராமணன் மற்றவர்களிடமிருந்து எதை வாங்கினாலும், அது அவனுடையதே. ஏனென்றால் எல்லாம் அவனுடையதாயிருப்பதாலும் அவன் கிருபையின்றி மற்றவர்கள் வாழமுடியாமையாலும் தான்"

சு. 102, 103. "இந்த பிராமணர் முதலானவர்களின் தர்மத்தை பகுத்தறிவதற்காக பிர்மனால் இந்தசாஸ்திரத்தின் மஹிமையை அறிந்த பிராமணன் தன் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கலாம். மற்றஜாதிக்கு உபதேசிக்கக் கூடாது"

சு. 105. "இந்த சாஸ்திரத்தைக்கூறும் பிராமணன் தன் 7 தலைமுறையையும் சுத்தப்படுத்தினவனாவான். அவன்

இந்த பூமியை முழுதும் தானம்வாங்க உரிமையுடையவனாகிறான்'' (கொடுப்பாரில்லை.)

அ. 2 சு. 20. ''இந்ததேசத்தில் ஜனித்தபிராமணர்களிடமிருந்து மற்றுமுள்ளவர்கள் எல்லா தர்மத்தையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்''

அ. 2 சு. 10, 11 ''யாவனொருவன் இந்த சாஸ்திரத்தை தர்க்க சாஸ்திர யுக்தியினால் ஆட்சேபிக்கின்றானோ அவனை மகான்கள் அப்புறப்படுத்த வேண்டும். அவன் வேதநிந்தகனும் நாஸ்திகனும் ஆகிறான்''

அ. 2 சு. 24. ''சூத்திரன் வேறு தொழில் செய்வதற்கு பிராமண சிசுருஷை (பணிவிடை)யை மட்டும் செய்துகொண்டிருக்க வேண்டும். அத்தகைய தேசங்களில் பிராமணர்கள் வசிக்கலாம், மற்ற தேசங்கள் மிலேச்ச தேசங்களாகும்''

சு. 31. ''சூத்திரனுக்கு நாமகரணம் செய்யும் பொழுது எப்பொழுதும் அடிமை, தாசன் என்ற தாழ்ந்த ஸ்திதியைக் குறிக்கும் நாமங்களைச் சூட்டவேண்டும்''

சு 135, 10 ''வயதுள்ள பிராமணனுக்கும் 100 வயதுள்ள க்ஷத்திரியனுக்கும்பிதா புத்திரன் என்ற மரியாதையோடு நடக்க வேண்டும் அதாவது பிராமணனை பிதாவாகவும் க்ஷத்திரியன் பிராமணனுடைய புத்திரனாகவும் கருத வேண்டும்''

அ. 2. சு 137. ''90 வயதிற்கு மேல் தான் சூத்திரனுக்கு யாரும் மரியாதை செய்யலாம். அதுவரையில் அவன் மரியாதைக்கு பாத்திரனல்ல''

நேயர்களே! மனுதர்ம சாஸ்திரத்தின் அதர்மத்தைப் பார்த்தீர்களா? இந்த சுலோகங்களைப்பார்க்கும் பொழுது முன்காலத்தில் பிராமணர்கள் பிராமணரல்லாதாரை எவ்வளவு தூரம் கொடுமைப்படுத்தியிருக்கின்றார்கள் என்பது விளங்கும். மேலும் பிராமணரல்லாதார்களுக்கு இரும்பைக் காய்ச்சி ஆசனத்தில் ஏற்றுவதும், நாக்கை அறுப்பதும், ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதும், கை கால்களை வெட்டுவதும் ஆகிய அநேக சுலோகங்கள் இதில் மலிந்து கிடக்கின்றன. அவைகளையெல்லாம் எடுத்து விரிக்கின் பெருகும்.

இத்தகைய ஸ்மிருதிகளையும், வேதங்களையும், புராணக் குப்பைகளையும் நம்பி ஏமாற்றமடைந்து வந்ததும்-வருவதும் போதாதா? பார்ப்பானையே கடவுளென்றும் மற்றையோர்களை சூத்திரரென்றும் கூறி நம்மை பாதாளத்திலழுத்தி வைத்தது போதாதா? இதைப்பார்த்து யார்தான் ஒருத்தாமலிருக்க முடியும்? இத்தகைய சாத்திரக் குப்பைகளை கடவுள் செய்தாரென்று சொல்லி ஜனங்களை நம்பச் செய்து விட்டார்கள். உலகிற்கு பரமபிதா எனப்படும் கடவுள் ஒரு கூட்டத்தார்கள் உயர்ந்தவரென்றும், மற்றுள்ளவர்கள் அவர்களுக்கு அடிமையாயிருக்க வேண்டுமென்றும் சொல்வாரா? உலகிலுள்ள ஜலம், நெருப்பு, காற்று, சூரியன், சந்திரன் முதலான உயர்ந்த சிருஷ்டிகளையெல்லாம் சிருஷ்டித்து அதெல்லாம் பொதுவாக எல்லோர்க்கும் பக்ஷபாதமின்றி உபயோகமாகும் வண்ணம் சிருஷ்டித்துள்ள கடவுள் இதைப் போன்ற ஆபாசக் களஞ்சியக் கதைகளை நிர்மாணிப்பாரா? அநியாயமாக இதை அவர் தலையில் சுமத்தலாமா? என்னே! சுயநலக்காரர்களின் சூழ்ச்சி! ஒரு பெரிய சமூகத்தை அடிமைப்படுத்தி தங்கள் காரியங்களை சாதிக்க வேண்டி எழுதி வைத்த சாத்திரங்களையும் வேதங்களையும் ஒழித்து நியாயமான வழியில் ஜனங்களை முன்னேற்றமடையச் செய்து சுயமரியாதையைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லும் 'குடி அரசை'யும் நம் தலைவரையும் குற்றஞ் சொல்லுவதும் எதிர்ப்பதும் ஆகிய முயற்சி செய்கின்றார்களே என்ன அநியாயம்! உண்மையை அழிக்க ஒருவராலும் முடியாதென்று இயம்புவோர் 'மத தூஷணம்' பிராமண தூஷணம் என்று சொல்லுவதின் கருத்து என்ன? உண்மையை அழிக்க முடியாதென்று கருதி தைரியத்தை அவலம்பிக்கலாமல்லவா? உண்மை மதத்தை-சுயமரியாதை மதத்தை-சகோதரத்துவ மதத்தை— அன்பு மதத்தை ஒருவரும் குறை கூறவில்லை. ஆபாசங்களிருந்தால் அதை கண்டிக்க வேண்டிய தவசியம் தான். முகம், தோள், கால் முதலான விடங்களிலிருந்து ஒருவரும் பிறக்க மாட்டார்கள்; எல்லோரும் ஒரே வழியாகத் தான் பிறக்கிறார்கள் என்று "குடி அரசு" சொல்லுகிறது. மனிதர்களுக்குள் பசி, நித்திரை, சுக துக்கங்கள் எல்லாம் சமமாயிருக்க பார்ப்பானுக்கு மட்டும் தர்மம் செய்தால் மோக்ஷம் கிடைக்குமென்று சொல்வது தவறென்றும், தர்மம் செய்தால் அது எல்லோர்க்கும் சமத்துவமாயிருக்க வேண்டுமென்றுந்தான் 'குடி அரசு' சொல்லுகிறது. சூத்திரர்கள் என்ற பதம் இழிவான பொருட்களைக் கொண்டி-

ருப்பதால் அது ஒரு பெரிய ஜன சமூகத்திற்கு அவமானத்தை உண்டு பண்ணக் கூடியதாயிருக்கிறதென்றுதான் 'குடி அரசு' சொல்லுகிறது. பிராமணர்களுக்குப் பணிவிடைசெய்வது தான் சூத்திரனுடைய தொழில் என்று சொல்லுவதும், அவர்கள் காலில் விழுவதும் ஆகிய காரியங்கள் மானங்கெட்ட செய்கையென்றுதான் 'குடி அரசு' கூறுகின்றது. மக்களெல்லோரும் சமமாயிருக்க 'நான் உயர்ந்தவன், நானே கடவுள்' என்று சொல்லி ஏமாற்றுவது மனித அறிவிற்கு மாறுபட்டதென்றுதான் 'குடி அரசு' சொல்லுகிறது. ஆலயங்களிலும் பொது ஸ்தாபனங்களிலும் எல்லோருக்கும் சமஉரிமை வேண்டுமென்றும், கடவுளை வணங்க தரகர் அவசியமில்லையென்றும், பால்யவிவாகம் ஒழியவேண்டுமென்றும், ஸ்திரீகளை கடவுள் போல் விவசாரிகளாக்கக் கூடாதென்றும், இதி என்ற பெயரால் ஒரு கூட்டத்தார்களின் வயிற்றை நிரப்ப வேண்டாம் என்றுந்தான் 'குடி அரசு' சொல்லுகிறது. ஆளுக்கு ஒரு ஜாதியும் ஆளுக்கொரு கடவுளுமாக வைத்துக் கொண்டு சண்டையிட்டு வீணாக மண்டை உடைக்கவேண்டாமென்றுந் தான் 'குடி அரசு' முறையிடுகிறது. நாட்டின் நலத்தைக் கருதி சொல்லும் நல்ல கொள்கைகளைக் கேட்கும் பொழுது மதம் போச்சு என்று சொல்ல வேண்டாம். எல்லா பதார்த்தங்களிலும் குண தோஷங்கள் கலந்துதானிருக்கின்றன. தோஷத்தை நீக்கி குணத்தை மட்டும் ஏற்றுக்கொள்வதுதான் இயல்பு. நெல்லின் உமியை நீக்கி அரிசியையும், கரும்பின் தோல், சக்கை முதலானவைகளை நீக்கி ஸாரமான ரசத்தையும் தான் ஸ்வீகரிக்கின்றோம்.

ஆகவே, மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட மதங்களிலுள்ள ஆபாசங்களையும், மூடக்கொள்கைகளையும் நீக்கி விடுவதால் மக்களுக்கோ மதத்திற்கோ ஒரு ஆபத்தும் வாராது. மூடக்கொள்கையை மதங்களென்று கருதியிருந்தால் அது அழிய வேண்டியதவசியம், அழிந்து விடுவதும் உண்மை. கடவுள் பெயராலும், மதத்தின் பெயராலும் நிகழும் அக்கிரமங்களைக்கண்டிக்கும்பொழுது, 'மதம்போச்சுநாஸ்திகமாச்சு, கடவுள் இல்லை' யென்று சத்தம் போடவேண்டிய அவசியம் சிலருக்குண்டு. அதனால் இழிவடைந்து கொண்டிருக்கும் சிலர் அவருடன் சேர்ந்து கூப்பாடு போடுவதின் அவசியம் இன்னதென்று தான் தெரியவில்லை. ஆயிரக்கணக்கான வருஷங்களாக, மிருகங்களிலும் கேவலமாகப் பாதாளத்தில் அழுந்திக் கிடப்பது போதாதென்று அவர்கள் கருதுகின்றார்கள் போலும்.

மனுஸ்மிருதியை பழைய பாட்டி கதை யென்றும், அதை யாரும் பொருட்படுத்துவதில்லை யென்றும் சிலர் கூறுகிறார்கள். ஆனால் பழைய பாட்டி கதையின் அஸ்திவாரத்தில் கட்டியுள்ள மாடிகளில் மக்கள் உலாவுகின்றார்களே? அங்கு வருணாச்சிரம பேய் தான் நிறைந்திருக்கின்றது. மக்கள் அம்மாடிகளில் வர்ணாச்சிரம பேய் பிடித்து ஆடுகின்றார்கள். இப்பேயை ஓட்ட யார் என்ன மந்திரத்தை கண்டு பிடித்திருக்கின்றார்கள்? எந்த மந்திரங்கட்கும் பாட்டி அசைய மாட்டாள். பாட்டிக்கு மிருத்துஞ்சய ஓமம் பிர்ம தேவர்களால் செய்யப் படுகிறது. இதனால் பாட்டிக்கு ஆயுள் நீண்டு கொண்டே போகும். ஆகையால் பாட்டி கட்டி வைத்த கட்டிடங்களும் அதனுள்ளிருக்கும் வருணாச்சிரம பேய்களும் உடைக்கப் பட்டாலன்றி தேசத்திற்கோ, ஜனங்களுக்கோ ஒரு நன்மையும் உண்டாகாதென்பது நிச்சயம்.

ஹிந்து மதத்தை அழிக்க முயலுகின்றார் னென்று கருதுபவர்கள் அதே ஹிந்து மதத்திலுள்ள சில பிரமாணங்களை கவனிப்பார்களாக.

வாசிஷ்டம்:— "யுக்தி யுக்த முபாதேயம் வசனம் பாலகாதபி. அந்யத்ருண மிவதியாஜ்யம் அப்யுக்தம பத்மஜன்மனா"

காருடம்:— "ஸ்வஸ்வ வர்ணாச்சிரமாசார, நிரதா சர்வ மானவ: நஜானந்தி பரம் தர்மம் வ்ருதா நஸ்யந்திடாம்பிக"

சிவஞானதீபிகை:— "னோகபடசாஸ்த்ராணி ப்ரபஞ்ச கத்தி தானாசித்ருஷடா விஸ்வாச பூர்வக்துவித்வா நபிநலத்யவேறா"

1. கருத்து:—'யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒத்திருக்கும் விஷயங்களை ஒரு குழந்தை சொன்னாலும் அங்கீகரிக்கவேண்டும், அதற்கு முரண்பட்டவைகள் பிர்மனால் சொல்லப்பட்டதாயினும் நிராகரிக்க வேண்டும்'

2. 'ஜனங்கள் வர்ணங்களிலும், ஆச்சிரமங்களிலும், ஆசாரங்களிலும் கட்டுப்பட்டு மயங்கி உண்மையான என்னுடைய பரதர்மத்தை அறியாமல் வீணே டாம்பீகர்களாய் நசித்துப் போகின்றார்கள்'

மனம் அல்லது மனசு.

(தோழர் ம. சிங்காரவேலு B. A B. L. எழுதியது.)

பண்டைக் காலந் தொடங்கி, 1912-ம் வருடம் வரை சரீரத்திற்குள் மனம் என்பதாக ஒன்று உண்டென்றும், அந்த மனத்தினால் தான் நாம் எண்ணுகின்றோமென்றும், நமது எண்ணம் சரீரத்தோடு சம்பந்தப் பட்டிருந்தாலும், அது, சரீரத்திற்கு அன்னியமென்றும், நமது மனம், நமக்குள்ளே தெரியுமே அல்லாது, பிறர் கண்ணுக்காகிலும், பிறர் பரீட்சைக்காகிலும் உட்படாதென்றும், மனோ நூல்கள் (Pshchology) சொல்லிக்கொண்டு வந்தன. மனோ நூல் அதாவது, மனதைப் பற்றி பேசும் நூலுக்கும், மற்ற பூத பௌதிக நூல்களுக்கும், இதுவே வித்தியாசமாக இருந்து வந்தது. பிரபஞ்சப் பொருள்கள் யாவும், வெளிமுகமாகப்பார்க்கலாம், வெளி முகமாக பரீட்சிக்கலாம். வெளி முக (புற) ஆராய்ச்சிக்கு, சகல வஸ்துக்களும் உட்படுகின்றன. ஆனால், நமது எண்ணம் மாத்திரம் சூட்சுமப் பொருளென்றும், கண்ணுக்குப் புலப்படக் கூடியதல்ல வென்றும் சொல்லப் பட்டு வந்தது. மனமென்றால் என்ன? எண்ணமென்றால் என்ன? இதற்கு ஆதி காரணமென்று கூறப்படும ஆன்மா, கடவுள் என்றால் என்ன?

---

3. 'உலகில் அநேக உண்மைக்கு மாறான திருட்டு நூல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை நம்பி வித்வான்களும் மோசம் போனார்கள்' என்பதாம்.

இதனால் பிராமணர்களால் எழுதப்பட்ட திருட்டு சாஸ்திரங்களை நம்பக்கூடாதென்றும், யுக்தி அனுபவங்கட்கு ஒத்ததையே அங்கீகரிக்க வேண்டுமென்றும், வர்ணாச்சிரம தர்மத்தை கட்டி அலைபவர் டாம்பீகர்களாய் வீணாக நசித்துப் போகின்றார்கள் என்றும் ஏற்படுகிறது.

என்ற இந்தக் கேள்விகளுக்கு, உள்புகுந்து பார்த்தால் தான் தெரியுமென்று மனநூலாசிரியரும், மதஸ்தரும், மத தத்துவ நூலாசிரியரும் சொல்லிக் கொண்டு வந்தனர். மனம், சித்தம், எண்ணம், ஆன்மா, கடவுள் என்ற இந்த பதங்களால் குறிக்கப்படும் பொருள் இன்னவை என்று உறுதியாக யாரும் விண்டிலர். எனினும், இந்தப் பதங்களைப்பற்றி எழுதியுள்ளனவும், எழுதி வைப்பட்டனவுமான நூல்கள் கோடான கோடியே. இந்த சொற்களின் மேல் கட்டிய கதைகளென்ன? எழுந்த தர்க்கங்களென்ன? ஆனால், பகிர்முக (வெளி) விசாரணையில், இந்த பதங்கள் ஒன்றுக்கும் பொருள், அதாவது வஸ்து இன்னதென்று ஏற்படுவதாகக் காணோம்.

பூதப் பிசாசுகள், இருளன், வீரன், குட்டிச்சாத்தான், முனீஸ்வரன், நரகம், மோட்சம், சிவன், விஷ்ணு, கடவுள் சாத்தான் போன்ற சொற்கள் எந்தப் பொருளையும் குறிக்காதது போல், மனம், எண்ணம், சித்தம், சைதன்யம், சிதாகாசம், வியாபகம், இயற்கை எண்ணம் பரம்பரை எண்ணம் முதலியன கற்பனா வார்த்தைகளென்றே நடத்தை ஆராய்ச்சியால் விளங்குகிறது. இந்த ஆராய்ச்சியில் "சித்து சடம்" என்ற பதங்கள் வித்தியாசத்தை இழந்ததாகக் காணப்படுகிறது. மற்ற மெய்ஞ்ஞான நூல்களிலிருந்து "சித்து" என்ற வார்த்தை விலக்கப்பட்டது போல், நடத்தை நூலிலும் சித்து, மனம், எண்ணம் முதலிய வார்த்தைகள் நீக்கப்படுகின்றன.

நடத்தை நூலாவதென்ன? மனிதனுடைய நடத்தை அல்லது நடக்கைகளைக்குறித்துப் பேசும் நூலாகும். நடத்தையைத் தான் நாம் பார்க்கிறோம். சுய அல்லது இயற்கை அறிவு Instinct என்று சொல்வதும், பயம், கோபம், அன்பு என்று அழைப்பதும் Emotion எண்ணமென்பதும் Thought சகலமும் நடத்தையே. நமது அவயவங்களின் நடத்தைகளே இந்த நடத்தைகளுக்குக் காரணமாகும். நமது தேக அவயவங்கள், வெளியில் உண்டாகும் தூண்டுதலாலோ, அல்லது உள்ளே உண்டாகும் தூண்டுதலாலோ Slimulus அசைவுறுகின்றன. Response இந்த அசைவுகள் தான் நடத்தையாகத் தோன்றுகின்றன.

பிறந்த குழந்தையை முலைப்பாலுண்ணத் தூண்டுதல் செய்தவுடன், அது, சலனிக்க அதாவது அசைய ஆரம்பிக்கிறது. இதைத் தான் பால் உண்ணுகிறதென்று சொல்லுவது.

வயிற்றில் ஒன்றுமில்லாவிட்டால் குடல் அசைந்து தொண்டையைத் தூண்டுகிறது. இந்தத் தூண்டுதலால் தொண்டை சலனிக்கிறது. இதைத் தான் அழுகையென்று வழங்குகின்றோம். இதே மாதிரியாகவே ஈரல், இருதயம் முதலிய அவயவங்கள் சலனமுற்றால், பயமோ நடுக்கமோ தோன்றுகின்றது. அழும் குழந்தையை உதட்டை மெதுவாகத் தடவினாலும், அல்லது ஆண், பெண் அவயவத்தைத் தொட்டாலும் அழுகை நின்று முக மலர்ச்சி பெறுகிறது. குழந்தையைத் தலை கீழாகத் தொங்கவிட்டால் நடுக்கமுறும். அசைவுறாமல் தடுத்தால் கோபமுறும். ஆகையால் பச்சிளங்குழந்தைகள் காட்டும் அழுகையும், கோபமும், பயமும் அதன் அவயவங்களின் சேஷ்டையே. இந்த சேஷ்டைகளைத் தகுந்த தூண்டுகோல்களால் அதிகப்படுத்தலாம், அல்லது மாற்றலாம், அல்லது நிறுத்தியும் விடலாம். இந்த ஆராய்ச்சிகளின் படி, இளங்குழந்தைகளை எந்தெந்த மாதிரி நடக்க வேண்டுமானாலும், அம்மாதிரியே அதன் நடத்தையை மாற்றக் கூடும். குழந்தைகளைத் திருடச் செய்தாலும் செய்யலாம். அல்லது ஞானியாகச் செய்தாலும் செய்யலாம். எல்லாம் பழக்கமே. தொட்டில் பழக்கங்களாகிய பயம், வெட்கம், கோபம் முதலிய வேண்டா நடத்தைகளை மாற்றி, தைரியம், நாணமின்மை, கோபமின்மை முதலிய வேண்டும் நடத்தைகளைக் காட்டச் செய்யலாம். இதனாலும், மனிதனுடைய நடத்தைகளுக்கு நேர் காரணங்களாயுள்ள அவயவங்களைக் கவனியாது, வெறுஞ் சொற்களை மாற்ற முயன்று வந்தோம். இந்த மூடப்பழக்கத்தினால், மனிதருடைய நடவடிக்கை இன்றைக்கும் சமூக வாழ்வுக்கு நேர் விரோதமாகவே இருந்துவருகின்றது. இனி இந்த ஆராய்ச்சி பெருகப் பெருக, சமூக வாழ்வுக்கு எந்த நடத்தை வேண்டுமோ அந்த நடத்தைகளையே வளர்க்க முடியும். இந்த ஆராய்ச்சியால் குலத்திற்குத் தக்கபடி குணமென்பது பொய்யாய் விட்டது. எந்தக் குலத்தில் பிறந்தாலும், அந்தக் குழந்தைகளை சமூக வாழ்வுக்கு வேண்டிய நடத்தைகளைக் காட்டவும் செய்யலாமெனப் பெறப்பட்டது. தொட்டில் பழக்க வழக்கங்களை வேண்டியவாறு தூண்டுதல் செய்யும் பட்சத்தில், நடத்தைகளும் வேண்

டியவாறு வரும். ஆஸ்திக உலகமாக்கினாலும் ஆக்கலாம், நாஸ்திக உலகமாக்கினாலும் ஆக்கலாம். கடவுளர் எண்ணங்களும் (வார்த்தைகள்) அவைகளால் உண்டாகும் பக்தி, பயம், பிரார்த்தனை, துவேஷம், வைராக்கியம், முதலிய நடத்தைகளும், தொட்டில் நற்பழக்க மூலமாகவே உலகில் இல்லாமலே செய்துவிடலாம். இந்த நடத்தை ஆராய்ச்சியால், இதுகாறும் தெரியாதிருந்த தூண்டுகோல்களால் இனி உலகம் சீக்கிரத்தில் சீர்பெறுமென்பதற்கு ஐயமில்லை.

மனித நடத்தைகளுக்கு மூன்று வித பழக்கங்கள் உளவாகத் தெரிகிறது. சித்திரத்திற்கு கைப்பழக்கமும், எண்ணத்திற்கு நாவின் பழக்கமும் கோபம், தாபம், அன்பு, ஈகைக்கு நமது குடலும் காரணமென்று தெரிகிறது. கை கால்களால் நடக்கவும், ஓடவும், ஆடவும், அடிக்கவுமான நடத்தைகள் உண்டாகின்றன. இந்த நடத்தைகளைப் பழக்கத்தினால் செம்மையாக்கலாம். "சித்திரமும் கைப்பழக்கம்" என்றார் பெரியோர். எண்ணத்தையும் நாவின் திறமையால் உண்டாக்கலாம். நாவின், அதாவது நாக்கு, தொண்டை, பேசும் சதை, மூச்சுப்பை முதலிய பேசுதற்கு வேண்டிய அவயவங்களின் சேஷ்டையை எண்ணமென்று வழங்குகின்றோம். எண்ணம், ஞாபகம், நினைவு முதலிய நடத்தைகள் யாவும், நமது பேச்சின் பரிணாமங்களே. நாம் உரத்துக் கூவும்போது பேசுவதாகவும், நமக்கு நாமே பேசும்போது, நாம் எண்ணமிடுவதாகவும் சொல்கின்றோம். இந்த சித்தாந்தத்தின்படி, ஊமை எண்ணுகின்றானா? அல்லது நினைக்கின்றானா? என்று கேட்கலாம். நாம் வார்த்தையால் பேசுவதுபோல், அவனும், சைகையால் பேசுகின்றான். அவனது சைகையே அவனுக்கு நினைவாகும். லாராபிரிஜ்மான் என்ற ஊமைப் பெண் தான் தூங்கும்போது, கையாலும் விரல்களாலும் சைகை செய்து கொண்டிருந்தாள். இதுவே இவளுக்கு கனவாகும். நாம் எண்ணுகின்றோம் என்பதும், நமது நா முதலிய அவயவங்களின் நடத்தையே. இந்த அவயவ நடத்தையை, ஏதோ விபரீதமாக எண்ணி, இதை

சூட்சுமப் பொருளென்றும், மனமென்றும், கடவுள் ஸ்வரூபமென்றும் வழங்கி வந்தது நமது தொட்டில் பழக்கமென்று அறியவும்.

கோபம், தாபம், அன்பு, ஈகை முதலிய நடத்தைகள், நமது குடல்களின் அசைவுகளே. "குடல் நடக்கிறது" என்று வழங்கும் அனுபவ வார்த்தைகளாலும், பயத்திற்கு குடலே காரணமென்று நன்கு விளங்கும். பாம்பைக் கண்டு சிலர் பயப்படுகின்றார்கள் இருளைக் கண்டு சிலர் பயப்படுகின்றார்கள். இந்த நடத்தைகள் தொட்டில் பழக்கங்களே. ஆனால் இந்தப் பழக்கங்களை, குடல்களின் நடவடிக்கைகளைக் கொண்டு மாற்றி விடலாம். பயங்கொள்ளிகளை பயப்படாமலும் செய்யலாம், இதைப்பரீட்சை செய்துமிருக்கின்றார்கள். நன்மைகளையே ஒருவன் செய்து வர வேண்டுமானால் அந்தக் காரியத்திற்குரிய குடல் பாகங்களைப்பயிற்றுவோமானால் அவன் நல்ல காரியங்களையே செய்து வரக்கூடும். ஒருவன் செய்து வரும் பெரும்பான்மையான காரியங்கள், அவன் இளமையிலிருந்து பழகியபடி செய்கின்றானேயொழிய கர்மத்தாலுமல்ல; கடவுளாலுமல்லவென அறிக. ஆகலின் ஒருவனுடைய துர்ச் செய்கைகளுக்கும் நற்செய்கைகளுக்கும் எந்த ஜனசமூகத்தில் பழகினானோ அந்த சமூகமே அதற்குக் காரணமாகும்.

இந்த ஆராய்ச்சியில் ஏற்படும் முடிவுகள் என்னவெனில், மனிதன் நடையை சமூகங்களுக்குத் தக்கவாறு அமைத்துக் கொள்ளலாம். வேண்டிய நடையை அதன் அவயவங்களைக் கொண்டு திருத்திக்கொள்ளலாம். இதனை அறியாது, மனத்தைக் கற்பித்தல் என்றும், பயபக்தியால் நடத்தை சீர்படுமென்றும், கடவுளருளால் நன்மை பயக்குமென்றும் சொல்லி வந்ததெல்லாம், வீண் சொற்களே. நமது உடலின் உறுப்புகளை விசாரித்தல், நமது தற்கால கடமைகளாகும். அந்த விசாரணையின் பலனைக்கொண்டு நமது மக்களை வளர்த்தலே சத் புருஷ லட்சணமாகும்.

பகுத்தறிவும்—சமயமும்

(டாக்டர், ஆர். பி. பராஞ்சிபை)

மனிதன் தனது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் தனது பகுத்தறிவை உபயோகித்து நன்றாய் ஆழ்ந்து ஆலோசித்து அதனதனின் பலாபலன்களை அறவே உணர்ந்து நடக்கிறான். ஆனால் அதே மனிதன் மத ஆதிக்கத்திற்கு உட்பட்ட வேத சாஸ்திர சம்பந்தமான விஷயங்களில் அடிமைப்பட்டு யோசித்துப்பார்க்கவும் கூட பயப்படுகிறான், மதம் என்னும் பதத்துக்கு பொருள் என்ன என்பதைக் கூட உணராமலே மதம் என்றால் ஒடுங்கிகீழ்ப்படிகிறான். சாதாரணமாக மதம் என்பதற்கு இதுவரை யாராலும் ஒரு குறிப்பிட்ட வியாக்கியானம் சொல்லப்படவே இல்லை. சொன்னதாக இருந்தாலும் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டதாகவோ—உலக வழக்குக்கு ஆவது ஒப்புக்கொள்ளப்பட்டதாகவோ இல்லை. மதத்துக்காக வக்காலத்து வாங்கித்திரியுமொருவர் பகுத்தறிவாளியொருவருடன் வார்த்தையாட நேர்ந்தால், அப்பொழுது அவருடைய மதமானது மெதுவாகக் குறுகி கடைசியாக மக்களின் எதிர்கால வாழ்க்கையின் மீது வீணான, உபயோகமற்ற அவாவையும், நாட்டத்தையும் உற்பத்தி செய்துவிடுவதையே நாம் பொதுவாகப் பார்க்கின்றோம். இவர் இவ்வாறு மக்களின் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் எட்டாத ஒரு வாழ்க்கையைப் பற்றி மிக்க விஸ்தாரமாகவும், ஆடம்பரமாகவும், அழகாகவும் வர்ணித்துரைப்பதுமல்லாமல் தர்ம சாஸ்திரத்திற்கடுத்த நீதிகளையும் பழக்கவழக்கங்களையும் மிக்க சவிஸ்தாரமாகவு முச்சரிக்கின்றார். மேலும், மதத்திற்காகவக்காலத்துவாங்கினவருடைய மனத்தில் ஜெபம்செய்வதினாலேற்படக் கூடியகாரியசித்தியும், அர்த்தம்தெரியாது இயந்திரம்போலச் செய்யப் பட்டு வரும் மதச்சடங்குகளினால் ஏற்படக் கூடிய நலமும், சர்வவல்லமையும் பொருந்தியதாகக் கருதப்படும் ஒரு தீர்க்கதரிசியின் மீதோ, அல்லது ஒரு இரக்ஷகரின் மீதோ உள்ள ஒருவித நம்பிக்கையும், மேலும் அவ்வித தீர்க்கதரிசியோ, அல்லது இரக்ஷகரோ தங்களுடைய நித்திய வாழ்க்கையில் இயற்கையாக நேரிடும் எல்லாவித

சம்பவங்களிலுமிருந்து தங்களைத் தடுத்து ஆட்கொள்ளுவார் என்ற எண்ணமும், இன்னும் இதைப் போன்ற அனேக் கோட்பாடுகளும் நன்றாகப் பதிந்திருப்பதையும் காணலாம்.

பகுத்தறிவாளியோ இவைகளுக்கு மாறாக, மக்கள் தங்களுடைய வாழ்க்கையை எவ்வாறு சுகமாக நடத்தமுடியுமென்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து வருவதுடன், என்ன செய்தால் அவ்வித வாழ்க்கை தொடர்ந்தாற்போல் நடைபெற முடியுமென்பதில் அவாவுள்ளவனாகி அதற்கான முறைகளில் ஈடுபடுகின்றான். மேலும் எத்தகையகாரியங்களால் மக்கள் இடைவிடாது முன்னேறிச் செல்ல முடியுமென யோசித்து அதற்கான வகைகளில் தன்னுடைய முழுமனத்தோடும் முழுப் பலத்தோடும் பாடுபடுகின்றான். மக்களின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்வதில் ஓர் அந்தம் அல்லது எல்லை இருக்கின்றதாகப் பகுத்தறிவாளியொருவன் அறிந்து, அதைப்பின்பற்றி ஆராய்ச்சி செய்வதில் ஒருவித பிரயோஜனமும் மக்களுக்கு ஏற்படாதெனத் தெரிந்து கொள்வதனால் தான் அவன் அத்தகைய காரியங்களில் தன்னுடைய மனதைச் செலுத்தாமல் மக்களின் அறிவுக்கும், புத்திக்கும் எட்டக்கூடிய விஷயங்களிலேயே தன்னுடைய முழுப்பலத்தோடும், வல்லமையோடும் ஈடுபடுகின்றதற்குத் தயாராக இருக்கிறான். மக்களின் சன்மார்க்கங்களுக்குரிய நீதிகளை அவன் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொள்ளுகின்றான். ஏனெனில் அவன் அத்தகைய நீதிகள் மக்களின் இயற்கைக் குணத்தையனுசரித்து நிறுவப்பட்டதாகக்கருதுகின்றானேயல்லாது மற்றபடி அவைகள் யாரோ ஒருவருடைய கட்டளையென்றாவது, அல்லதுவேத புஸ்தகங்களில் கூறப்பட்டிருக்கிறபடியால் அவைகளைத் தழுவியே தான் மக்கள் நடக்கவேண்டுமென்னும் எண்ணத்தினாலாவது அவன் அவ்வாறு கருதுவதில்லை. மேலும் அவன் மக்களின் சன்மார்க்க நீதிகளையும், ஒழுக்கங்களையும் அவரவர்களுடைய விதியெனக் கருதாமல் அவர்களின் முன்னேற்றத்திற்கான துறைகளில் ஈடுபட்டு அவைகளை அனுஷ்டானத்திலும் நடை முறையிலும் கொண்டுவருவதற்காகவும் பாடுபடுகின்றான். ஆதிகாலத்திய கொள்கைகளுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் அடிமைப்பட்டிருப்பவனைவிட பகுத்தறிவாளியினால் உலகத்திற்கு எண்ணிறந்த நன்மைகளேற்படுகின்றன.

தற்கால விஞ்ஞான சாஸ்திரங்களின் அறிவானது உண்மையாகவே, வேதங்களின் கோட்பாடுகளுக்கு விரோதமா

கவே இருக்கின்றது. வேதத்தில் நம்பிக்கையுள்ளவர்களும், வேதக் கொள்கைகளையுடையவர்களும் எக்காலத்திலும், எல்லாத் தேசங்களிலும் விஞ்ஞான சாஸ்திரங்களின் அறிவைக் கொலை செய்து, தங்களுடைய ஆதிக்கத்தையே நிலை நாட்ட முயன்றிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் தங்களுடைய இழிசெய்கைகளில் வெற்றியடைந்தார்களில்லை. அதற்கு மாறாக, அவர்கள் எப்பொழுதும் தோற்கடிக்கப்பட்டு, பின்னோக்கியே செல்லும்படியாக நேரிட்டது. இவ்வாறு இவர்கள் தோற்கடிக்கப் பட்டதினால் சில சந்தர்ப்பங்களில் இவர்கள் தங்களுடைய அறிவற்ற செய்கைகளைக்குறித்தும், தங்களுடைய மூதாதைகளின் செய்கைகளைக் குறித்தும் வருந்தும்படியாகவும், அவைகளுக்காக வெட்கமடையும்படியாகவும் நேர்ந்தது. மேலும், அவர்களுக்கு எவ்வளவு தான் பிரியமில்லாதிருந்த போதிலும் கூட பெரும்பாலான விஷயங்களில் அவர்கள் தற்காலநிலைமையையே ஒத்துக் கொள்ளும்படியாகவும் நேர்ந்தது. ஆனால், புதிதாக ஏதாகிலும் ஒன்று நேர்ந்தால் அதற்கும் அவர்கள் போர் தொடுத்து, தங்களுடைய கொள்கையை நிலை நாட்டப் பின்வாங்குவதுமில்லை. பாமர மக்களின் மீதுள்ள அவர்களுடைய ஆதிக்கமானது இன்னும் வலிமையுள்ளதாகவும்,பலம்பொருந்தியதாகவுமேதான் காணப் படுகின்றது மேலும், அவர்கள் தங்களுடைய ஆதிக்கத்தை சாஸ்வதமாகவும்,நீடித்தும் நிற்கக்கூடியதுறைகளில் வெகுமும் முரமாகவேஎப்பொழுதும், எல்லாவிதசந்தர்ப்பங்களிலும் பாடுபட்டும் வருகின்றனர். விஞ்ஞான சாஸ்திரத்தின் அறிவைக் கொண்டும், உதவியைக் கொண்டும் நாம் ஏதாவதொரு பிரச்சினையைத் தற்காலிகமாகவும், வெற்றிகரமாகவும் முடிவடையச் செய்ய உண்மையாகவே தவறிவிடுவோமேயானால் அப்பொழுது அவர்கள் ஏதாகிலும் ஒன்றைக்கூறி அவ்விடத்தில் பொருந்த வைப்பதற்குக் கொஞ்சமும் பின்னடையார்கள். மேலும், அவர்களுடைய கூற்று தர்க்க ரீதிக்கு முரண்பாடுடையதாகவிருந்த போதிலும் சரியே, அல்லது பொருத்தமென்பது சிறிதளவேனுமில்லாதிருந்த போதிலும் சரியே. அதைப்பற்றி அவர்களுக்குக் கவலையோ, அல்லது அக்கரையோ கிடையாது.

தத்துவ சாஸ்திரத்தின் கடைசியான கேள்விகளுக்கு—அதாவது 'எப்படி?' 'ஏன்?' 'எங்கே?' என்பவைகளுக்கு—பகுத்தறிவாளியினால் பதில் அளிக்க முடியாவிடில், அவன் தனது அறியாமையைத் திருப்தியுடன் ஒத்துக்கொள்கிறான்.

மக்களின் ஜீவிய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பலாபலன்களின் மீது அவன் தனது முழு கவனத்தையும் செலுத்தி மக்களை இன்புறச்செய்ய வேண்டுமெனக் கருதுகின்றானேயல்லாமல், தனது அறிவுக்கும், தனது யோசனைக்கும் எட்டாத, ஒருவராலும் அறிந்துகொள்ள முடியாத விஷயங்களில் அவன் தனது மனத்தைச்செலுத்தி, யோசனைசெய்துமக்களை ஏமாற்றமடையும்படிச் செய்ய அவன் விரும்புவதே இல்லை. ஆனால் இவைகளுக்கு மாறாக மதக்கோட்பாடுகளைப் பின்பற்றுபவனும், மத வைராக்கிய முள்ளவனும் அவைகளைப் பற்றி யெண்ணிறந்த கட்டுக்கதைகளை மக்களுக்கு எடுத்துரைத்து, அவர்களின் மனத்தை அவ்வித வாழ்க்கையில் ஈடுபடும் படியாகவும் காட்டமடையும் படியாகவும் செய்வதில் கொஞ்சமும் அஞ்சுவதே கிடையாது. ஆனால், அவர்களால் உரைக்கப்படும் கூற்றுகளை நாம் இயற்கையுடனும், நமது வாழ்க்கையில் தினந்தோறும் நடைபெற்று வரும் சம்பவங்களினோடும் ஒத்திட்டுப் பார்ப்போமானால், அப்பொழுதுதான் அவர்களுடைய கூற்றுகளனைத்தும் அறிவுக்குப் பொருத்தமற்றிருப்பதையும், ஆராய்ச்சிக்கு நிற்காதிருத்தலையும் அறிந்து கொள்ளலாம். மேலும், உலகம் என்பது எப்பொழுது, யாரால் உண்டாக்கப்பட்டதென்பதைப்பற்றி திட்டமாயுரைக்க முடியாத நிலைமையிலிருக்கும் பகுத்தறிவாளியொருவனை அவர்கள் காணநேரிட்டால் அவன்மீது அவர்கள் அருவருப்படைந்து, அவனை வெறுத்து ஒதுக்கிக் கொண்டேதான் வருகின்றார்கள்.

உலகமெங்கும் ஒரு சக்தியிருப்பதாக எண்ணும் ஒரு மத சித்தாந்தமும் நமக்குள் உண்டு. இது ஒரு தனிப்பட்ட மனிதனின் உள் உணர்ச்சி என்பது ஒருபக்கமிருந்த போதிலும் இதைக்கொண்டு ஒரு படைப்பாளன் இருக்கின்றான் எனக் கொள்வது அவசியமில்லை. ஒரு படைப்பாளன் இருக்கின்றான் என எண்ணி மனோ சிருஷ்டி செய்வது சுலபம். ஆனால் அதை உண்மையென்று உறுதிப்படுத்துவதற்குச் சாதாரண சக்தியுள்ள மனிதர்களால் முடியாது. ஒரு "கிராமபோன்" இயந்திரத்தைப் பார்க்கும் பொழுது அது அநேக கருவிகளைக் கொண்டு, சில மனிதரால் செய்யப்பட்டிருக்கக் கூடும் என்று சொல்லலாம். இந்தக்கருவிகளைப் பார்த்து அவைகளைச் செய்த இரும்புக் கைத்தொழிலாளியைப்பற்றி நினைக்கலாம். அந்தக் கைத்தொழிலாளியைப்பற்றி நினைப்பதன் மூலம் சுரங்கங்களிலிருந்து இரும்பு எடுக்கப்படு

வதை ஞாபகத்திற்குக் கொண்டு வரலாம். பூமியிலிருந்து சூரியனுக்கும் செல்லலாம். விஞ்ஞான ஆராய்ச்சி இன்னும் இதற்கு மேலும் செல்லும். இதன் வளர்ச்சி இலக்கில் முடிவு பெறாததாகும். ஒரு ஆஸ்திகன் "கடவுளை யார் உண்டாக்கியது?" என்ற கேள்வியைக் குறும்புத்தனமானதாகவும் தூஷணையானதாகவும் கருதுகிறான். ஆனால் உண்மையில் இதற்குச் சரியான விடை கிடைப்பதே இல்லை. பகுத்தறிவாளர்களது நாஸ்திக வாதம் காரண காரியங்களறிந்த வாதத்திற்குப் பொருத்தமாயிருக்கிறது.

சர்வ வல்லமையும் தயாளமும் நிறைந்த ஒரு கடவுள், தன்னால் படைக்கப்பட்ட மக்களின் நிகழ் காலத்தையும் வாழ்க்கையின் போக்கையும் அறிந்தவராகவே இருத்தல் வேண்டும். அவர் இவ்வாறு அறிந்திருப்பாரானால் உலகமெங்கும் துன்பமும் கொடுமையும் நிறைந்திருப்பானேன்? ஒருக்கால் அவர் சர்வ வல்லமையற்றவராகவோ, அன்றி ஜீவகாருண்யமற்றவராகவோதான் இருக்கவேண்டும். அல்லது கடவுளோடு ஒரு "சைத்தா"னும் இருப்பதாகவும் அதுதான் இந்தக் கொடுமைகளுக்குக் காரணம் என்றும் சொல்லித் தப்பித்துக் கொள்ள வழி தேடலாம். அப்படியானால், "அந்தச் சைத்தானைப் படைத்தது யார்?" "அந்தச் சைத்தானின் மனதைக் கடவுள் மாற்ற முடியாதா?" "அந்தச் சைத்தானைக் கடவுள் கொல்ல முடியாதா?" என்ற இவை போன்ற கேள்விகள் எழுகின்றன. ஆகையால் இவையெல்லாம் மனக்குழப்பங்களேயன்றிவேறில்லை. இவைகளைக் கொஞ்சங்கூட பொருட்படுத்தாது தூர விலக்குவதே சிறப்புடைத்தாம்.

இது போன்றே ஹிந்து மதத்திற்கும் மற்ற மதங்களுக்கும் ஆஸ்திவாரங்களாகிய "கர்மம்" என்பதைப் பற்றி வாதிக்கும் காரணங்களுமாகும். இந்த "கர்மம்" என்ற சொல்லைக் கொண்டே உலகில் துன்பமும், துக்கமும் குடி கொண்டிருப்பதற்குக் காரணம் காட்டிப் பலர் வாதிக்கின்றனர். இப்போதைய வாழ்க்கையில் அனுபவிக்கும் கஷ்டத்திற்கும், துன்பத்திற்கும் முன் ஜென்மத்தில் செய்த "கர்மவினை"ப்பயன் தான் காரணம் என்று சொல்லப்படுமானால் "அந்த ஜென்மத்தில் நான் அவ்வாறு நடக்க ஏன் தூண்டப்பட்டேன்?" என்ற நியாயமான ஒரு கேள்வி எழுகின்றது. அதற்கு விடையாக அதற்கு முந்திய பிறவிகளைச் சொல்லி மழுப்புகிறார்கள்.

யோகி.

[ஜே. பி. கிருஷ்ணன்.]

(1)

சீதாவுக்கு தற்போது வயது 17. பருவத்தால் கனிந்த பாவை. இன்பத்தின் ஓவியம். சவுந்தர்யத்தின் சிகரம், குணக்குன்று. ஆனால் அவள் ஒரு பேதை! குழந்தையைப் போன்ற இருதயம் படைத்தவள்! சுலபத்தில் ஏமாறும் சுபாவம்.

சீதாவுக்கு மணமாகி இன்று 6 முழு வருடங்கள் கழிந்து விட்டன. அவள் ஒரு பரிதாபத்திற்குரிய விதவையல்ல. ஆனால், "கடன் பட்டும் பட்டினி கலியாணம் செய்தும் சன்யாசி" என்பதைப் போல சீதா புருடனுள்ள ஒரு விதவை! கணவனைத் துறவாத கைம்பெண்.

சீதாவின் தந்தை சிவசைலம் பிள்ளை பெரிய செல்வந்தர். பழமை விரும்பி, சமயப்பற்றால் பழுத்த சைவப்பழம்! தன் மகளுக்குச் சிறு வயதிலேயே செல்லக் கலியாணம் செய்ய வேண்டுமென்பது அவரது விருப்பம். அதற்கு ஒரு கருவி

சாதாரணமாக வழங்குவது போன்ற 8400000 ஜீவராசிகளின் வாழ்க்கையையே எடுத்துக் கொண்ட போதிலும் இவர்களின் ஆதி உற்பவத்தில் என்ன நடந்தது? ஏன் நடந்தது? துன்பமும் கஷ்டமும் தொடர்ந்து வருவதற்குக் காரணமாயிருந்தவை எவை? என்ற இவைபோன்ற ஐயங்கள் எழுகின்றன.

இவைகளுக்கெல்லாம் ஒத்துக் கொள்ளக் கூடிய விடை ஒன்றுதானிருக்க முடியும், அவ்விடை "மனித அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டாதவை" என்னும் விடையாகத்தானிருக்கும்.

யாக உபயோகப்படுத்தப் பட்டவன், சோமசுந்தரன் என்ற பள்ளி மாணவன். பச்சைப் பசுங்குழந்தைகள்! "கலியாணம்" அவர்களுக்கு ஒரு விசேஷ வேடிக்கை மாதிரி தோன்றியது!

கலியாணத் தமாஷ் முடிந்தவுடன், சோமசுந்தரம் தன் பெற்றோர்களோடு சென்னைக்குச் சென்று விட்டான். அவன் அப்பொழுதும் பள்ளிக்கூடத்தில் படிக்கிறான். சோமசுந்தரத்தின் பெற்றோர்களும் செல்வந்தர்கள் தான்! ஆனால், சுத்தக் கர்னாடகம்! பத்தாம் பசலிப் பிரகிருதிகள்! ஒரே செல்வமகன் சோமசுந்தரம். எனவே, பையனின் ஆடம்பரச் செலவுகளுக்கு தாராளமாகப் பணம்கிடைத்து வந்தது.

வருடங்கள் பல கழிந்தன. காலச்சக்கரத்தின் வேகத்தால் பல மாற்றங்கள்!

சோமசுந்தரத்தை ஒரு பெரிய "மைனர்"ராக்கி விட்டது பணம்! அவனைப் பெரிய ஷோக்கிலாவாகவும், காமுகனாகவும் ஆக்கி விட்டனர் அவனது புதிய சகாக்கள்! பணம் பத்தும் செய்யுமல்லவா?

சட்ட மறுப்பு வீரர்களாகிய காங்கிரஸ் வாலாக்கள் இன்று "பதவி"க்கு வாய் பிளந்து அலைவதைப் போல, சோம சுந்தரத்தின் மனது பல புதுப்புது பெண்களை நாடி அலைந்தது! தேசியப் பதவி வேட்டையாளர்க்குக் கிடைத்த "காங்கிரஸ் குல்லா பட்டர்"களைப் போன்று, அந்தப் பெண் வேட்டைக்காரனுக்கும் தகுந்த பட்டர்கள் இருவர் கிடைத்தனர். அவனது சகல ஆசைகளுக்கும், பேச்சுகளுக்கும், செய்கைகளுக்கும், அவர்களேபாஷ்ய கர்த்தாக்கள். ஆசிரியர்கள்.

"என்ன பிரதர்! விபசாரம் தெய்வீகக் கலையோன்னா! பேரின்ப வழிகாட்டியல்லவா அது! தெரியாமலா நம்ம பெரியவாள் கோவில்களிலே தாசிகளை வைத்திருக்கிறார்கள்? எல்லாம் நம்ம க்ஷேமத்திற்குத் தான்!" என்று மனங்கூசாமல் சொல்லுவார்கள் அந்தப் பட்டர்கள். ஆரியக் குஞ்சுகள்.

சீதா ஒரு அழகுக் குவியல்தான். என்றாலும் சோம சுந்தரத்தின் ஆடம்பரக் கண்களை அவள் அழகு திருப்தி செய்யவில்லை. "நாகரிகம் தெரியாத பட்டிக்காட்டுப் பெண்!"

இது தான் காரணம். தன் மாமனார் வீட்டுக்கு வருவதையே அடியோடு நிறுத்தி விட்டான். சிவசைலம் பிள்ளை மிகுந்த வருத்தமடைந்தார். சீதாவை அழைத்துப்போக வேண்டிப் பல கடிதங்கள் எழுதினார், ஆள் மூலமும் சொல்லியனுப்பினார், பயனில்லை. ஆனால் சோமசுந்தரம் விடுத்த பதில் அவரை வேண்டுமென்றே அவமானப்படுத்துவதைப் போலிருந்தது.

''ஆங்கிலப் படிப்பு இல்லாத அசடுகளை நான் விரும்புவதில்லை. நாகரிகமும், நாஸூக்கும் தெரியாத நங்கையை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. நான் விரும்புகிற விதத்தில் சீதா இருந்தால் ஏற்றுக் கொள்ளப் படுவாள்''

இவைதான் சோமசுந்தரத்தின் விசித்திரமான பதில், ''பக்கா வைதீகர், ஆங்கில துவேஷி, பழைமைப் பிரியர். அவர் சீதாவுக்கு இனிமேல் ஆங்கிலம் கற்பிக்கவா போகிறார்? இப்படியாவது அவள் ஒழியட்டும்'' என்பதே அவனது நோக்கம், குருசிட்சை!

எல்லாரும் ''நாகரிகம்'' என்ற வார்த்தையை நல்ல வழியில் பயன் படுத்துவார்கள், ஆனால் சோமசுந்தரம் அதைப் பயன் படுத்தியது ஒரு புதிய தினுசு! பொருளற்ற குயுக்தி முறை!

(2)

கோவிந்தராஜன் ஒரு ''பிரைவேட்'' வாத்தியார். ரொம்ப கெட்டிக்காரன் சிறு வயதில் கல்வி கற்காத பலர் அவனிடம் படித்தனர் அவன் வெளியூர்க்காரன், வாலிபப்பருவம், சற்று அழகனுங் கூட. பச்சையாபுரத்து வாசிகளுக்கு அவனிடம் ஒரு கவுரவம்! மரியாதை! கோவிந்தராஜனின் பேச்சும், தோற்றமும், யாவரையும் வசீகரிக்கும் தன்மையது. சிவசைலம்பிள்ளை அவனது சைவப் பற்றையும், சிவபக்தியையும் வியந்தார்! இப்படி ஒரு கண்ணியமுள்ள ஆசிரியர் கிடைத்ததைக் குறித்து அவருக்குப் பெருமகிழ்ச்சி!

சீதாவுக்கு அறியாத பாலப்பருவத்தில் மணமுடித்ததின் வினை அவர் மனதை உருத்தாமலில்லை. தன் அறியாமைக்கு மிகவும் வருந்தினார். என்ன செய்வது! சோமசுந்

தாம் பிரியத்தின்படியே, சீதா ஆங்கிலம் கற்றாலாவது, கண வனோடு க்ஷேமமாக வாழமாட்டாளா; என்பதே அவரது அபிலாஷை. எனவே தன் பழம் பெருமைகளையும் கருதாமல் சீதாவுக்கு ஆங்கிலம்கற்பிக்க முற்பட்டார் சிவசைலம். அவருக் குத் தன் மகள் எப்படியாவது நன்றாக வாழ்ந்தால் போது மென்றிருந்தது.

சீதா படிக்க ஆரம்பித்து 6 மாதங்கள்; மிகவும் அக்கறை யோடுதான் பயின்றுவந்தாள். ஆயினும் அவள் அந்த துர்ப் பாக்கிய நிலைமையில், பருவக் கோளாறில், என்னென்னமோ நினைத்தாள், மனம் அவளை எங்கெங்கோ இழுத்துச் சென் றது. அவள் நெஞ்சுரமற்ற பேதை; எல்லாம் விதியின் பயன். ஆண்டவன் செயல் என்றே நம்பினாள்.

ஆசிரியர் கோவிந்தராஜனின், அர்த்தம் நிறைந்த பேச் சும், செய்கையும் அவள் மனதைக் கலக்கி விட்டன. சீதா ஒரு மன உறுதியற்றவளாக இருப்பதை கோவிந்தராஜன் நன் றாக உபயோகப் படுத்திக் கொண்டான். அவளது குழந்தை யுள்ளத்தில், நாளடைவில் சிறுகச் சிறுக, சிற்றின்பத்தின் ஆசையலைகளை எழுப்பிக் கொண்டே வந்து ஒரு பெரிய கொந்தளிப்பை உண்டாக்கிவிட்டான். ஆம்! அதிக சிரம மில்லாமலே அந்தக் "கனி"யை ருசிபார்த்து விட்டான் கோவிந்தராஜன். ஒரு பேதையின் பரிதாப நிலைமை யடையப் பெற்றாள் சீதா. எதிர்காலத்தை எண்ணிப் பாராம லேயே தன் உடலை அந்த "உத்தம?" ஆசிரியனுக்கு அர்ப் பணம் செய்து விட்டாள் அந்த அபலை!

கொஞ்சநாள் இந்த சேர்க்கை மிகவும் ரகசியத்திலிருந்து வந்தது. சிவசைலம் பிள்ளையும் கோவிந்தராஜனை சந்தே கிக்க வில்லை. வீட்டிலும் யாருக்கும் சந்தேகம் கிடையாது. காரணம், அவன் ஒரு சிவபக்தன்! சாஸ்திர சமயப்பற்றுள்ள ஆசாரசீலன்! நீறுபூத்த மேனியன்!! தெய்வத்திருத்தொண் டன்!!! ஆனால் இயற்கை தன் வினையை முடித்து விட்டது! அதற்குப் பாரபட்சமேது? சீதாவின் வயிற்றில் "கரு" தரித்தது! ஆ! எத்தனை பெரிய சங்கடம்! சீதா தன் பாதி உயிரை இழந்தவளானாள். மலை போன்ற அந்தத் துன் பத்தை-அவமானத்தை ஏற்கச் சகியாத அவளது பேதை மனம் உடைந்து, பாகாய் உருகியது. எதிரே ஒரு பயங்கர மான பூதத்தைக் கண்டவள் போல நடுங்கினாள்! பதறினாள்!

கோவிந்தராஜனின் மூளை வேகமாக வேலை செய்தது. பலப் பல யோசித்தான். ஒரு முடிவுக்கு வந்தான். சீதாவைப்பல விதத்திலும் இன்மொழிகளால் தேற்றினான். தன் கடைசி மூச்சு உள்ள வரையில் அவளைக்காப்பதாக வாக்களித்தான், கடவுள் மீது ஆணைவைத்தான். அவனது வார்த்தைகளால் சீதா ஒரு புதிய நம்பிக்கையும் உற்சாகமும் பெற்றாள். சாகத் துணிந்தவருக்கு சமுத்திரம் முழங்காலளவு தானே! எனவே சம்மதித்தாள்.

மறுநாள் இரவு நடுச்சாமம்! ஆகாயத்தில் ஒரே மப்பும் மந்தாரமும்! குளிர்ந்த காற்று "ஜில்"லென்று வீசியது. கருகும்மென்றிருந்த அந்தச்சாலை ஸ்தலத்தில், ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லும் அந்தக் குறுகிய பாதையில், மேலெங்கும் போர்வையால் போர்த்தப்பட்ட இரண்டு மனித உருவங்கள் வேகமாக நடந்து பச்சையாபுரத்து எல்லையைத் தாண்டின. அந்தச் சிறு கிராமம் அவர்களை இழக்கும் துக்கத்தைப் பொறுக்காமலோ என்னமோ, ஆகாயத்தினின்றும் "பல பல" வென்று கண்ணீரை உதிர்த்தது!

(3)

இடையில் இரண்டு வருடங்கள் கழிந்தன.

சிவாசலம் பிள்ளை அடைந்த சோகத்திற்கு அளவுகோல முடியாது. அவர் அரும்பாக இளைத்து விட்டார். தன் மகளின் நடத்தையாலும், அவளைக் கெடுக்கும் வரையில், அந்த போலிச் சைவனை தாராளமாக அனுமதித்த தன்னுடைய குருட்டு "சமய"ப்பற்றைக் குறித்தும், அவர் மிகவும் துக்கித்தார். அவரது பழமைப்பற்றும், அர்த்தமற்ற நம்பிக்கையும், ஆச்சார அனுஷ்டானங்களும் ஆட்டம் கொடுத்து விட்டன! நிற்க,

சென்னையில் சோமசுந்தரத்தின் லீலா விநோதங்கள் வெகு மும்முரம்! அவன் பெயர் தெரியாத "காலாடி"களே சென்னையில் கிடையாது. சதா உல்லாசப் பொழுது போக்கு தான். எல்லாம் பணத்தின் மகிமை!

அன்று அவன் முகத்திலே சந்தோஷக் குறியில்லை. முகவாட்டம்!

"என்ன மிஸ்டர் பாலு! உங்களால் முடியாதா? நீரும் நாகராஜனும் சேர்ந்து, எவ்வளவு பெரிய இடங்களையெல்

லாம் சுளுவாக முடித்து வைத்தீர்களே! இது தானா ஒரு சிரமம்?'' என்றான் சோமசுந்தரம், உடைந்து போன குர லில்.

''சோமு! பெரிய செல்வந்தர் வீட்டுப் பெண்களாயிருந் தால்தானென்ன! மன உறுதியற்றவர்களை மயக்குவது சுல பம். ஆனால் இந்தக் ''கோமதி'' அந்த ரகத்தைச் சேர்ந்தவ ளல்ல. அவள் மனம் வைரம் பாய்ந்திருக்கிறது! ஆடவர் களை அவள் வெறும், புழுக்களுக்குச் சமதையாக மதிக்கி றாள். சென்ற வாரம் தியாகராயநகரில் கூடிய பெண்கள் மகாநாட்டில், அவள் செய்த பிரசங்க முழக்கத்தைக் கேட்டி ருந்தாயானால் அப்பா! அவளை நீ கனவிலும் நினைக்க மாட் டாய்!' என்றார் பாலு என்ற பாலுசாமி அய்யர், அச்சக் குறிகளோடு.

''நான் இப்பொழுது செவிடன்! அந்தக் கதையெல்லாம் என் காதில் ஏறாது. அவள் பேரழகு என்னைக் கொள்ளை கொண்டு விட்டது. அவளையடையாவிட்டால் என் உயிர் நிற்காது. அன்று கடற்கரையில் ஒரே வினாடி தான் பார்க்க முடிந்தது. மின் வெட்டுப்போல் மறைந்து விட்டாள். ஆஹா! என்ன சௌந்தர்ய வதனம்! அந்தக் கண்களில் என்ன ஜொலிப்பு! அந்தக் குரலில் தான் என்ன மாதுரியம்! என்ன இனிப்பு! நானும் உங்கள் தயவால் எத்தனையோ பெண்களை ருசித்து விட்டேன். அவர்களெல்லாம் பெண்களல்ல. பேய் கள்! வளர்த்துவானேன் எப்படியாவது அவளை நான் சேர்ந்தே தீர வேண்டும். இல்லாவிடில் என் உயிரை மாய்க்க வேண்டும்!'' என்று பிதற்றினான் சோமசுந்தரம்.

பாலுசாமி பலத்த யோசனையில் ஆழ்ந்தான். ''ஆசா மிக்கு மோகம் மீறி விட்டது, காரியத்தை எந்த வழியிலாவது முடிக்காவிட்டால், நம் தொப்பை தான் வாடிப்போக நேரிடும். ஆனால் அந்தக் கோமதியோ சாதாரணப் பெண்ணல்ல. சுதந்திர தாகங் கொண்ட வீராங்கனை, கவுரவமான அந் தஸ்திலிருப்பவள். அவளைச் சரிப்படுத்துவதென்றால்...ப்பூ அது நடக்கிற காரியமல்ல! வெறும் பகற்கனவு! ....ஆம்! அது தான் சரி! நமது கடைசிப்பாணத்தைத் தான் பிரயோ கிக்க வேண்டும். நாமென்ன அவ்வளவு கோழையாகவா போய் விட்டோம்! நல்லது, அவளும் அந்த வேலைக்காரக் கிழவியும் தனியாகத்தான் வண்ணாரப் பேட்டையில் குடி யிருக்கிறார்கள், முதலில் அந்தக் கிழவியை ''வெள்ளையப்ப''

னைக் கொண்டு சரிப்படுத்த வேண்டும். ஆம்! மிருகத்தனமாகவாவது சோமுவின் ஆசை பூர்த்தியாவதே நமக்குப் பரமதிருப்தி!'' அய்யர் தன் யோசனையை உருவாக்கி விட்டார்.

''சோமு! ரொம்ப சிரமந்தான்; இருந்தாலும் எப்படியாவது முடிச்சுடறேன். முதல்லே ஒரு 200 வளையம் வேணும். ஆனாக்கே அவளை நீ சுயப் பிரக்ஞையோடு அடைய மாட்டாய் சம்மதந்தானே!'' என்றான் பானுஅய்யர்.

சோமசுந்தரம் தலையை அசைத்தான். ஆனால் அவன் மனதில் ஒரு சங்கடம், குழப்பமான ஒருவகை உணர்ச்சி!

(4)

அன்று சென்னை வண்ணாரப்பேட்டை ''அனாதைப் பெண்கள் விடுதி''யின் வருஷப்பூர்த்திக்கொண்டாடம். ஏராளமானபெண்களின் கூட்டம்! அதன் ஸ்தாபகரும், காரியதரிசியுமான தோழர் கோமதியின் அன்றைய சொற்பொழிவு பெண்கள் உலகைத் தட்டி எழுப்பியது. வேஷக்கார ஆடவர்களின் அட்டூழியங்களைப் 'பிட்டு பிட்டு''க் காண்பித்தது. பெண்கள் மனதில் ஒரு பெரிய புரட்சியும், உத்வேகமான உணர்ச்சியும் கிளப்பியது கோமதியின் பிரசங்கம்.

விழா இனிது முடிவு பெற்றது, பகலெல்லாம் பட்ட சிரமத்தால் கோமதிக்கு மிகவும் களைப்பு இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு, வேலைக்காரக்கிழவியால் கொடுக்கப்பட்ட பாலையருந்தி விட்டு, நிம்மதியாகப்படுத்தாள் படுக்கையில், அவ்வளவுதான்! கொஞ்ச நேரத்தில் அவள் ஸ்மரணையிழந்தாள்! அப்புறம் நடந்த ''சிறையெடுக்கும் படலங்கள்'' ஒன்றும் அவளுக்குத் தெரியாது.

ஆனால், கோமதி சுய நினைவு பெற்றபோது, தான் ஒரு புதிய சிங்காரப்படுக்கையறையில் ஒரு மஞ்சத்தில் சயனித்திருப்பதைக் கண்டாள்! என்ன வியப்பு! எதிரில் ஒரு அலங்கார வாலிபன். அந்த முகம் பழக்கமானதைப்போல் தோன்றுகிறது! அவள் மனதில் கோடி நினைப்புகள்! சங்கடங்கள்!

அவள் பிரக்ஞை பெற்று எழுவதை எதிர் பார்த்திருந்த சோமசுந்தரம் அவளருகில் சென்றான்.

"சீதா! மன்னிக்க வேண்டும். உனக்கு நான் பெரிய அபசாரம் செய்து விட்டேன்" என்றான் தழுதழுத்த குரலில்.

கோமதி மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். மனக்குழப்பம்! அந்த வாலிபனை உற்று நோக்கினாள். அவள் உள்ளத்திலே ஒரு உண்மையின் பிரகாசம்! ஆம்! சந்தேகமில்லை. "தன் கணவன்!" அவள் நெஞ்சுக்குள் பலவிதமான உணர்ச்சிகளின் கொந்தளிப்பு!

சோமசுந்தரம் கோமதியின் கரங்களைப் பற்றினான்.

"சீதா!"

அவன் தொண்டை கம்மியது. பேசமுடியவில்லை. கண்களில் நீர் சுரந்தது! அடுத்த வினாடி அவனது விரித்த கரங்களில் புகுந்தாள் கோமதியென்ற புனை பெயர் கொண்ட சீதா! ஒருபுத்தம் புதிய இன்பத்தின் ஊற்றுக் கண்திறந்தது அவர்கள் கூட்டுறவில்! வாழ்க்கையின் விச்சித்திரமான பாகம்! விநோதமான சம்பவம்!

பின்னர் இருவரும் தங்கள் சொந்தக் கதைகளைப் பரிமாறிக் கொண்டனர். மனம் திறந்து உரையாடினர்.

சீதா தன்னை அந்த போலி யாசிரியன் வஞ்சகமாகக்கெடுத்ததும், கர்ப்பவதியான நிலைமையில், காப்பதாக வாக்களித்து சென்னைக்கு அழைத்து வந்ததும், ஒரு வாடகை வீட்டில் தன்னை அனாதையாக விட்டு விட்டு ஓடி விட்டதும், பின்னர் ஒரு குழந்தை பிறந்து இறந்து விட்டதும், அதிலிருந்து வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டு, கோமதியென்ற பெயரோடு சமூக சீர்திருத்தச் சேவையில் இறங்கினதும், "பெண்கள் அனாதை விடுதி" ஸ்தாபித்ததும், கையிலிருந்த பணமும், நகைகளும் தன் வாழ்க்கையை நிம்மதியாக நடத்திச் செல்வதையும், தன் சோழைத் தனத்தால் ஒரு பெரிய படிப்பினையைக் கற்றுவிட்டதாகவும், மனம் விட்டுச் சொன்னாள்! வருந்தினாள்! சோமசுந்தரம் அவளைத் தேற்றினான்! பின்னர் சோமு தன் சகாக்களின் போதனை

யால் மதியிழந்து, செய்த அக்கிரமங்களையும், குழந்தை புத்தியால் விபசாரத்தைப் புனிதமாக மதித்து மோசம் போனதையும், சீதாவைக் காரணமில்லாமல் வெறுத்ததையும், கடைசியாகக் கோமதியை இன்னாளென்று அறியாமலேயே மோகித்ததும், பழிக்கஞ்சாத பாலுவின் சூழ்ச்சியாலும் பணப் பிரயோகத்தாலும், வேலைக்காரக் கிழவியைச் சரிப் படுத்தி பாலில் மயக்க மருந்திடச் செய்து, அவள் அங்கு கொண்டு வரப்பட்டதும், அந்தப் பிரக்ஞையற்ற பரிதாப நிலைமையில், கோமதியை இன்னாளெனத் தெரிந்து தன் மனசு நடுங்கினதும், இச்செய்கை பெரிய அவமானமாகத் தோன்றினதும், எனவே புத்தி தெளியப்பெற்று, இன்றோடு இம்மாதிரிச்காரியங்களைச் செய்வதில்லை யென்றும், இந்தப் பெரிய முட்டாள் தனமான குற்றத்திற்கு சீதாவின் மன்னிப்பைப் பெற்று, அவளோடு கண்ணியமாக வாழ வேண்டுமென்று விரும்பினதையும் விரிவாகச் சொன்னான். மனப் பூர்வமாகத் தன் செய்கைக்கு வருந்தினான் சோமசுந்தரம், மதிபெற்ற மைனர்!

"இருவருமே மோசம் போனோம்! இனியாவது அறிவோடும், மன உறுதியோடும் வாழ்வோம்! அன்றியும் நம்மைப்போல ஆண்டவன் செயலையும், ஆரியரின் பித்தலாட்டப் பேச்சுகளையும் நம்பி, வெளி வேஷத்தால் மயங்கும் மக்களைத் திருத்துவதே நமது தேசத்தொண்டாக இருக்க வேண்டும்" என்றாள் சீதா உருக்கமாக.

சோமசுந்தரம் மீண்டும் மனதில் பொங்கியெழுந்த ஆர்வத்தோடு சீதாவை அணைத்துக் கொண்டான்!

(5)

சோமசுந்தரம் திருந்தினான், சதிபதிகள் ஒன்று கூடி விட்டனர் என்ற செய்தி சிவசைலம் பிள்ளைக்கு எல்லையற்ற சந்தோஷத்தையளித்தது. அவர் தன் மனைவியோடு சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றார். தங்கள் மகள் மீதிருந்த கோபத்தையெல்லாம் உதறிவிட்டு மகளையும் மருமகனையும் கண்டுகளித்தனர் பெற்றோர்கள். அந்தக் கர்னாடக மாமனும், மாமியுங்கூட சீதாவை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டனர். எல்லாரும் பழைய சம்பவங்களை அடியோடு மறந்தனரென்றே சொல்லவேண்டும்.

சிவசைலம்பிள்ளை தம்பதிகளைத் தன் ஊருக்கு அழைத்துச் சென்று கொஞ்சகாலம் வைத்திருக்க விரும்பினார். பட்டணத்து மாப்பிள்ளையும், பட்டிக்காட்டுப் பெண்ணும், சேர்ந்ததைக் குறித்து பச்சையாபுரத்தில் கொஞ்சம் பரபரப்பு! ஊர்வம்பு! ஜாதிவெறியர் சிலர் அவர்கள் "பிராயச்சித்தம் செய்துக்கொள்ள வேண்டும், இல்லாவிடில் ஜாதியை விட்டு நீக்க வேண்டும்" என்று கூச்சலிட்டனர். ஆனால் அந்தப் "பூச்சாண்டி"க்கு அவர்கள் பயப்படும் நிலைமையில் இல்லாமையால் ஒன்றும் நடைபெறவில்லை. "இளைத்தவனைக் கண்டால் தான் எறும்புக்கும் நொக்கு!" என்பார்கள், அது கூட ஆளைப்பார்த்துத்தான் கடிக்குமாம்! சில மாதங்கள் சாதாரணமாகக் கழிந்தன, விசேஷ சம்பவங்களில்லாமல்.

* * *

ஆச்சரியம்! ஊரார் கவனத்தை அடியோடு கவர்ந்தார் அந்தப் புதிய யோகி! அன்றுதான் பச்சையாபுரத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் சிறுவயசு, சிவந்தமேனி! சாந்தமும், பக்தியும் தவழும் முகதேஜஸ்! தலையில் பெரிய சடா முடி! தேக முழுதும திருநீறு! உருத்திராட்ச மாலைகள்! அரையில் ஒரே ஒருகோவணம்! இவைகளே அவரது தோற்றம். பக்கத்தில் இரண்டு சிஷ்யர்கள்! ஊரையடுத்துள்ள அடர்ந்த புளியந்தோப்பில் தங்கல் போட்டனர். ஒரு சிறிய ஆச்ரமம் அமைக்கப் பட்டது.

'யோகியால் தீராத நோயில்லை, முடியாத காரியமில்லை, ஆனால் அவருக்கு அருள்மட்டும் சுரக்கவேண்டும். அதுதான் பிரதானம்! பிள்ளையில்லாத குறையா? வைத்திய நிவாரணமா? பில்லி சூன்யமா? பெருவியாதியா? வியாபார விருத்தியா? என்ன மகத்துவம்! அவர் இதைத்தான் செய்வார், இதைச் செய்யமாட்டார் என்பது கிடையாது, அவர் ஒரு அவதார புருஷர்தான்! சந்தேகமேயில்லை. இவ்வளவுக்கும் அவர் ஏதாவது பிரதிபலனைக் கருதுகிறாரா? அதுதானில்லை. ஏதோ காமே பார்த்துக் கொடுத்ததை அதுவுங்கூட சிஷ்யர்களதான் பெற்றுக் கொள்ளுகிறார்கள். என்ன மகத்துவம்! என்ன மகத்துவம்!!" இவைகள் ஊர்ப்பேச்சுகள். யோகியாருக்கு இலவச விளம்பரங்கள்!

இரண்டே நாட்கள் சுற்றுப்புற கிராமாந்திரங்களெல்லாம் யோகியின் மகத்துவம் பரந்து விட்டது! பக்தர்களின் கூட்

டம் புளியந் தோப்பை ஒரு சந்தைக்காடாக ஆக்கிவிட்டது. காணிக்கைகள் ஏராளமாகக் குவிந்தன. யோகியின் அருளை வேண்டி இரவு பகலாக அங்குக்காத்திருந்தனர் பல பெண்கள் அவர்களில் முதன்மை ஸ்தானம் வகித்தாள் கறுப்பாயி என்ற ஒருபெண்.

சீதாவும் சோமசுந்தரமும் இதைக்கேட்டு வியப்புற்றனர், அன்று மாலை இருவரும் சென்று யோகியைப் பார்த்தனர். அங்குள்ள நிலைமையை நுட்பமாக ஆராய்ந்தனர். அவர்கள் மனதில் பல பெரிய சந்தேகங்கள் தோன்றின! எனவே சாமர்த்தியமாகக் கறுப்பாயின் மூலம் சில உண்மைகளைத் தெரிந்து கொண்டனர்.

“யோகியின் முகம் எனக்குப் பழக்கமானதைப்போலிருக்கிறது” என்றாள் சீதா. ஆழ்ந்த கருத்துடன்.

“அப்படியா! அந்தச் சீடர்களின் தோற்றமும் என்னுடன் நெருங்கிப் பழகினவர்களின் தோற்றம்போலத்தான் காணுகிறது! என்ன ஆச்சரியம்! என்றான் சோமசுந்தரம்.

இருவரும் சிவசைலம் பிள்ளையிடம் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டனர்- மூவரும் சேர்ந்து வெகு நேரம் யோசித்த பின்னர் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தார்கள்; பாமர மக்களின் மூட நம்பிக்கை தெளிய வேண்டும், வஞ்சகர்களை வெளிப்படுத்த வேண்டும்; இதுவே அவர்களது நோக்கம்! லட்சியம்!

(6)

அவர் ஒரு சைவப் பிழம்பாக வீற்றிருந்தார். காலை நேரம் யோகியாரின் உதயகால பூஜை நடக்கிறது. ஆசனத்தில் அவரைச் சுற்றிலும் பக்த கோடிகள் தியானத்தில் மூழ்கியிருந்தனர்.

திடீரென்று போலீஸ் புலிகளின் தோற்றம்! யோகியாருக்கும் அவரது இரண்டு சீடர்களுக்கும் “சர்க்கார் வளையல்” மாட்டப் பட்டன! பக்தர்கள் திகைத்து விட்டனர், அரசாங்கத்தை வைதனர். மனம் போனவாறு பேசினர், யோகியார் கைது செய்யப்பட்ட சம்பவம் ஊரையே கலக்கி விட்டதென்றும் சொல்லலாம், எங்கும் பர பரப்பு!

இரண்டு தினங்களாய் விசாரணை நடைபெறுகிறது. சிவசைலம்பிள்ளை போன்ற பெரிய மனிதர்கள் கோர்ட்டினுள் வீற்றிருக்கின்றனர். யோகியும், சீடர்களும், கைதிக் கூண்டில் நிற்கின்றனர். அவர்கள் வேஷமெல்லாம் கலைக்கப் பட்டு விட்டன! வெளியில் ஏராளமான ஜனக் கூட்டம்! கருப்பாயி சாட்சியம் கொடுத்தாள்.

"எனக்குக் குழந்தைகள் கிடையாது. பெரிய குழந்தைப் பைத்தியம்! யோகியின் மகத்துவங்களை நம்பி அவரையண்டினேன். ஒரு நாளிரவு ஆசிரமத்திலேயே தங்கி யோகியின் அருளைப்பெறும்படி, இந்தப் "பக்கப் பூசாரிகள்" கட்டளையிட்டனர். நான் நம்பினேன். இன்னும் சில பெண்களும் தங்கினார்கள், ஆனால், அந்தோ! என்னை இப்பாவிகள் மூவரும் பயங்கரமாக அனுபவித்தனர்! கற்பையும், மானத்தையும் குலைத்தனர்! என்று கண்ணீர் விட்டுக் கதறினாள் கருப்பாயி.

அந்தக் காட்சியைக் கண்ட ஜனங்கள் ஆத்திரமும், ஆவேசமும் கொண்டனர். பின்னர் சீதாவும் சோமசுந்தரமும் விசாரிக்கப்பட்டனர். அவர்கள் அந்த யோகீஸ்வரர்களை இன்னாரென்றும், அவர்களால் தங்கள் வாழ்க்கை எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டதென்பதையும், இப்பேர்க்கொத்தவர்களைத் தண்டிக்காது விட்டால் விளையும் கெடுதல்களையும் விரிவாகச் சொன்னார்கள்.

யோகியான கோவிந்தராஜன் வேறு வழியில்லாமையால் தன் குற்றத்தை கண்ணியமாக ஒப்புக்கொண்டான். ஆனால் தன் வாக்கு மூலத்தில் அவன் சொன்னதாவது:—

"எனது "சமய பக்தன்" வேஷத்திற்கு, பச்சையாபுரத்து மக்கள் ஆதரவும், கவுரவமும், அளித்திராவிட்டால், நான் இவ்வளவு கேவல நிலைமைக்கு வந்திருக்கமாட்டேன். பாமர மக்களின் பக்குவான அறியாமையே எனக்கு மேலும் மேலும் குற்றவாளியாக வசதியளித்தது. பெண் பழியேற்றவர்கள் உருப்பட மாட்டார்கள்! அதற்கு நானே உதாரணம். கிரோஸின் எண்ணெய்க்கு, குப்பையும், நெருப்பும் கிடைத்த மாதிரி எனக்கு பாலுசாமியும், நாகராஜனும், சென்னையில் கிடைத்தார்கள். அவர்கள் தான் சோமசுந்தரத்தின் விபசார பாஷ்ய கர்த்தாக்கள்! நாட்டு மக்களின் தெய்வீக மூட நம்பிக்கையின் அஸ்திவாரத்தின் மீதே எங்கள் கற்கோட்

கடவுள் செயல்.

ஏழைகள் துயரம்.

இடம்—கோயில்.

பாத்திரங்கள்—புரோகிதர்கள், ஏழை மக்கள், சாது.

ஆண், பெண், குழந்தைகள் ஆகியவர்கள் ஒரு கடவுள் விக்கிரகத்தின் முன் நின்று முறையிடுகின்றார்கள்:—

ஓ கடவுளே! பஞ்சம்! பஞ்சம்!! இதைப் பார்த்துக் கொண்டு சகித்து மௌனம் சாதிக்கும் கடவுளே தங்களை வணங்குகிறோம். எங்களைக் காப்பாற்றும், காப்பாற்றும்.

சதாகாலமும், தங்களையே தொழுகிறோம். ஆனால் தாங்கள் சிறிதும் செவி சாய்ப்பதில்லை.

"அதுவும் எங்கள் நன்மைக்கே" என்று நம்பும்படி கற்பிக்கப் பட்டிருக்கிறோம். அவ்வாறே நாங்களும் நம்புகிறோம். நாங்கள் எப்பொழுதும் நம்புகிறவர்கள். யார் எதைச்

டையைக் கட்டினோம். லீலைகள் புரிந்தோம்! ஆனால் எங்களால் ஏமாற்றப்பட்டவர்களாலேயே எங்கள் கோட்டை தகர்த்தெறியப்பட்டது! வேஷம் வெளியாக்கப்பட்டது! பாமர மக்களின் மூடத்தனத்திற்கு எங்கள் சரித்திரம் ஒரு ஆதர்ஸமாக விளங்கட்டும்."

யோகி கோவிந்தராஜனும், சீடர்களான பானுசாமியும், நாகராஜனும், தண்டிக்கப்பட்டார்கள். அவர்கள் அந்த வேஷத்தில் கொள்ளையடித்த பொருள்களை சென்னை "அனாதைப் பெண்கள் விடுதி"க்கு அளிக்கப்பட்டது. நீதிபதி, சீதாவுக்கும் சோமசுந்தரத்திற்கும் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்; அவர்களைப் பாராட்டினார்.

கைதிகளை கோர்ட்டுக்கு வெளியே அழைத்து வரும் போது, கூடியிருந்த மக்கள் போட்ட, சீதாம்மாளுக்கு ஜே! சோமசுந்தரத்திற்கு ஜே! சுயமரியாதைக்கு ஜே! என்ற கூச்சல் ஆகாயத்தை யளாவி ஒலித்தது!

சொன்னாலும் நம்புகிறோம். அப்படியெல்லாம் நம்பியும் இன்னும் பட்டினி கிடக்கின்றோம்.

தயவு செய்து எங்களைக் காப்பாற்றும்! கடவுளே காப்பாற்றும்! நாங்கள்—ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், மிதிக்கப்படுபவர்கள், உம்முடைய மக்களாலேயே புறக்கணிக்கப் பட்டவர்கள், உணவற்றவர்கள், ரத்தமற்றவர்கள்.

குப்பைமேடுகளிலும், அழுக்கு மூலைகளிலும், குடிசைகளிலும் ஆடுமாடுகளைப்போல் சதா 'துன்பம்' என்னும் கருவிலேயே வளர்ந்து வருபவர்கள். ஆதரவற்றவர்கள். ஏனைய ஜனங்களால் வெறுத்து ஒதுக்கித்தள்ளப்பட்ட, பசிப்பிணியால்வாடி வதங்கும் அனாதைகள். எங்களைக்காப்பாற்றும்! கடவுளே காப்பாற்றும்.

(அருவருப்பும், அலட்சியமும் நிறைந்த ஒரு சிரிப்பு விக்கிரகத்தின் பின் புறமிருந்து கேட்கிறது)

மீண்டும் ஏழை மக்கள்:—எங்கள் நெஞ்சுலர்ந்திருக்கிறது. எங்கள் குழந்தைகளின் உதடுகளெல்லாம் காய்ந்திருக்கின்றன. இன்னும் சில இறந்து கொண்டிருக்கின்றன.

எங்களுடைய குடிசைகளில் தானியமே கிடையாது, ஆனால்ஒருசிலருடைய களஞ்சியங்களில் தானியங்கள் நிறைந்திருக்கின்றன. அவர்கள் விலைக்கு வாங்கி சேமித்து வைத்திருக்கிறார்கள். எங்களால் விலைக்கு வாங்க முடியாது; விலைகள் உயர்ந்து விட்டன. அந்தோ கஷ்டம் நாங்கள் என் செய்வோம்? எங்கள் கையில் காசில்லை. இதோ தங்களுக்கு புஷ்பங்கள் கொண்டுவந்திருக்கிறோம்.

மற்றொருவர்:-நான் வெறுங்கையோடு தான் வந்திருக்கிறேன்.

ஒரு பெண்:-இதோ நான் தேங்காய் பழம் கொண்டு வந்திருக்கிறேன். என் கையிலிருந்த காப்பை விற்றுத் தேங்காய் பழம் வாங்கினேன்.

மீண்டும் ஏழைகள்:—சதாதுன்பம்! ஆண்டவனே பேசக்கூடாதா? நாங்கள்—ஏழைகளாகியநாங்கள்—ஆதரவற்ற நாங்கள்...பசியால் மடிகின்றநாங்கள், சதா காலமும் ஏன் துன்பத்திலும், கஷ்டத்திலும் அழுந்தித் தவிக்க வேண்டும்.

தாங்கள் வாயைத்திறந்து பேசக்கூடாதா? நாங்கள் அருகதை யற்றவர்களாக்கும். எல்லாம் தங்கள் சித்தம்.

மறுபடியும் ஏழைகள்:—ஆண்டவனே! எங்கள் ஆண்டவனே! நாங்கள் எதையும் சகித்துக் கொள்வோம். ஆனால் ஓ கடவுளே! எங்கள் குழந்தைகள் பசிப்பிணியால் மடிகின்றன. கொடுமை! அந்தோ கொடுமை! என்றென்றும் துன்பம்—எங்காவது தீப்பற்றிக்கொண்டால் எங்கள்குடிசைகளே அதிவிரைவில் பற்றிக்கொள்ளுகின்றன. காலரா முதலிய தொத்து நோய்களால்எங்களில் அனேகர் ஈக்களைப் போல் மடிந்து விடுகின்றனர். மழைவந்தால் எங்கள்குடிசைகள்ஒழுகுகின்றன. எங்கள் குழந்தை குட்டிகளெல்லாம் வெள்ளத்தில் மிதக்கின்றன. ஆற்றில் வெள்ளம் வந்து விட்டால் எங்கள் குடிசைகளை யெல்லாம் கங்காதேவி சமரீகரம் செய்து விடுகிறாள். அன்பான ஆண்டவனே! தங்களைத் திருப்திப் படுத்துகிறோம். எங்களைக் காப்பாற்றும், காப்பாற்றும்.

(விக்கிரகத்தின் பின்புறம்தங்க நாணயங்கள் விழுகின்ற சப்தம் கேட்கின்றது.)

இன்னும் எவ்வளவு காலம் கஷ்டப்படுவது. நாங்கள் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியது எங்கள் 'தலைவிதி' யாக்கும். அறிவாளிகளோ எங்களைப்பார்த்துநாங்கள்கஷ்டப்படத்தான்வேண்டுமென்கிறார்கள். எங்கள் எஜமானர்களும் அவ்விதமேகூறுகிறார்கள், பூர்வ ஜென்மத்தில் செய்த வினையை இப்போது அனுபவிக்கிறோ மென்கிறார்கள். அது எங்கள் கர்மவினை என்கிறார்கள், அதையே அடிக்கடி சொல்லி வற்புறுத்துகிறார்கள்.

ஆனால் நல்ல வீடுகளில் யாதொருவேலையும் செய்யாமல் பணக்காரர்களாய் சௌகரியமாய் வசித்து வருபவர்கள் வண்டி வண்டியாய்த் தானியங்கள் வாங்கி சேமித்துத் வைத்திருக்கிறார்கள். அவர்கள் முன் ஜென்மத்தில் நல்ல காரியங்கள் செய்திருப்பார்களாம். அந்த விதம் சொல்லியே எங்களை நம்பச் செய்கிறார்கள். நாங்களும் நம்புகிறோம். இந்த ஜென்மத்தில் அவர்கள் எந்த நல்ல காரியமும் செய்வதைக்காணோம். ஏன் அநேக காரியங்கள் செய்கிறார்கள். அவை நல்ல காரியங்களா? அல்ல.

ஆனால் செல்வவான்கள் கெட்ட செய்கைகள் செய்வார்களா? என்கிறார்கள். அப்படியானால் அவர்களிடமுள்ள தானியத்தில் எங்களுக்கு கொஞ்சம், கொஞ்சம் பகிர்ந்து கொடுத்தால் அது நன்மையான காரியமாகாதா? கட்டாயம் செய்வார்கள், கடவுள் சம்மதமிருந்தால், எல்லாம் அவர்விருப்பப்படிதானேநடக்கும், வறியாராகியநமக்கு அவருடையசித்தம் மிகவும் கொடுமையான- சகிக்க முடியாத்துன்பத்தோடுகூடிய உருக்கக் கூடிய கஷ்டத் தோற்றத்தோடு வருகிறது அவரது சோதனையெல்லாம் அவரது சித்தம். ஆனால்நம்மீது செலுத்தும் சித்தத்தின் தோற்றமென்ன? காலரா, பிளேக் கொருப்பு, வெள்ளம், பஞ்சம் முதலிய இந்த தோற்றத்தோடேயே நம்மை ஆசீர்வதிக்கிறார்.

இவை மட்டுமா? வரிப்பளு, அதிக வேலை, தூசி, உஷ்ணம், கல்லுடைத்தல், பாரமான சுமைகளை தூக்கல், வியர்வை, களைப்பு, அபராதம், எஜமானனின் கடுங்கோபம், வசவு, தண்டனை இது போன்றன.

ஆனால் சிலருக்கு வேறுவிதமாய் தோற்றமளிக்கிறார். நல்ல காற்று, சுவையான உணவு, பெரிய வீடுகள், பட்டு மெத்தைகள், பிரகாசமான விளக்குகள், அசையாத வாகனங்கள், ஆடல் பாடல்கள், சிரிப்பு, சந்தோஷம் இவை முதலியன.

எப்படி இருந்தாலும் அவருடைய சித்தத்தை ஏற்று நாம் அநுபவிக்க வேண்டியதுதான். அவ்விதமே நாம் போதிக்கப்பட்டு வருகிறோம். ஒரு சிலர் ஏனையோர்க்கு இதை போதிக்கிறார்கள். எல்லோரும் அந்த ஒரு சிலரது சித்தப்படி அடங்கி நடக்கவேண்டும். ஏனெனில் அந்த ஒரு சிலரது சித்தம் கடவுளது சித்தமாகும். கடவுளே காப்பாற்றும்! எங்களைக் காப்பாற்றும் !!

(அக்கோவிலின் மற்றொரு பக்கம் நடைபெறும் ஒரு செல்வந்தர் விவாகம்—அங்குநடக்கும் நடன சத்தம், கைகள் கொட்டும் சத்தம் காதைத் தொளைக்கிறது.)

பசி......பசி.........எப்படிச்சுடுகிறது? பிள்ளை பெற்றவளுக்குத் தெரியும் பிரசவ வேதனை என்பது போல பசியை அநுபவித்தவர்களுக்கே அதன் வேதனை தெரியும். ஒரு சிலருக்கு அது தெரியவே தெரியாது. ஏனையோருக்கு அது

தெரியும், அதிக காலமாகத் தெரியும். பசியென்ற நெருப்பு வயிற்றைச்சுடுகிறது.

மறுபடியும் ஏழைகள்:—ஓ ஆண்டவனே! இப்போது ஒரு கைப்பிடிதானியமே வேண்டும். அதற்காகவே தங்களை வணங்குகிறோம்.

எங்களது பெண்களின் கண்ணீர் தங்கள் மனதை கரைப்பதில்லையா? எங்களது குழந்தைகளின் சோர்ந்த கண்கள் தங்கள் கருணையை ஈர்ப்பதில்லையா? ரத்தம்வற்றிய அவர்களது உடல் தங்கள் கண்ணோட்டத்தை அழைப்பதில்லையா? உழைத்து ஒடிந்து போன அவர்களது சரீரம் தங்களது பெருமையைக் குறைப்பதில்லையா?

லட்சக் கணக்கானவர்கள் தாங்கள் தங்கள் சுயமரியாதை இழந்து மிருகங்களாகிக் கொண்டிருக்க தங்கள் சுயமரியாதையை நிலைநாட்ட இயலுமா? கஷ்டங்களெல்லாம் புண்ணிய மானவையென்று அந்த ஒரு சிலர் சொல்லுகிறார்கள், கையால் அவர்கொடுக்கிற கஷ்டங்களுக்காக நாம் அவருக்கு வந்தனம் செலுத்த வேண்டுமாம். இது என்ன நியாயம்?

(வழக்கம்போல் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு பிராமண புரோகிதர்கள் உள்ளே வருகிறார்கள்.)

அதோ அவர்கள் வருகிறார்கள்; மோட்ச வீட்டின் திறவுகோல் அவர்களிடமே இருக்கிறது. அவர்கள் மிகுந்த அறிவாளிகள்.

ஏழை மக்கள்:- காப்பாற்றுங்கள்! எங்களைக் காப்பாற்றுங்கள்!

புரோகிதர்கள்:-இதென்ன ஒப்பாரி வைக்கிறீர்கள். நீங்களெல்லாம் என்ன மிருகங்களா? நிம்மதியான இந்த இடத்தை அசுத்தம் செய்கிறீர்கள். (விக்கிரகத்தை சுட்டிக் காட்டி) அதோபாருங்கள், என்ன மௌனமாய், சாந்தமே உருக்கொண்டு விளங்குகிறார் பகவான்.

ஏழைகள்:—ஆண்டவனின் கோபத்தை சாந்தப் படுத்தவே நாங்கள் வந்திருக்கிறோம். அவரது கோபத்தினால் எங்கும் பஞ்சம்.

புரோகிதர்கள்:-நீங்கள் ஏன் வெறுங்கையோடு வந்திருக்கிறீர்கள்?

ஏழைகள்:-நாங்கள் துன்பம் நிறைந்த மனதுடன் வந்திருக்கிறோம். கடவுள் காணிக்கை செலுத்துகிறவர்களின் குறைகளையே கேட்பவர், நாங்கள் எங்கள் உயிரையே காணிக்கையாக கொண்டுவந்திருக்கிறோம். துன்பம் என்னும் புஷ்பத்தையும் கொண்டுவந்திருக்கிறோம்.

புரோகிதர்கள்:-அவருக்கு இவை தேவை யில்லை. பலருடைய துன்பத்தை அவர் பொருட்படுத்துபவரல்ல, சிலருடைய சந்தோஷமே திருப்தியளிக்கக் கூடியது. போங்கள் வெளியே. எவ்வளவு தைரியத்தோடு நீங்கள் இப்படிப் பேசுகிறீர்கள். மரியாதையாகத்திரும்பி விடுங்கள்.

ஒருவர்:-நான் ஒரு தேங்காய் கொண்டுவந்திருக்கிறேன்.

புரோகிதன்:-அஃதென்ன அற்பம்.

ஓர் வயோதிகன்:-நான் ஒரு ஆடு கொண்டுவந்திருக்கிறேன். கூட்டத்திலுள்ளவர்கள் (கோபத்துடன்) அந்த ஆடு திருடியது, அவன் எஜமானனிடம் திருடியது.

வயோதிகன்:-இல்லை! இல்லை! நான் அதை விலைக்கு வாங்கினேன்.

ஒருவன்:-உனக்கு அவ்வளவு பணமேது.

வயோதிகன்:-அது கடவுளுக்குத் தெரியும். என் மகளை விற்று அந்தப்பணத்திற்கே ஆடு வாங்கினேன். ஆட்டைப் பலியிடுங்கள், என் மகளைப் பலியிடுவதற்கு சமமாகும்.

புரோகிதன்:-ஒரு ஆடு-அவன் மகள், இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

(விக்கிரகத்தின் பின் புறமிருந்து சத்தம்.)

"எல்லா ஏழைகளும் ஆடுகளே"

புரோகிதன் -ஆட்டைக்கொல்லுங்கள். (ஆட்டை கொல்லப் போகும் அதே சமயம் ஒரு சாது உள்ளே வருகிறார்.)

ஜனங்கள்.-யார் அது? ஓ கோ! அவர்தான் கடவுளைப் பற்றி பக்தி ரசம் ஒழுகப் பாடிப் புகழ்ந்து எழுதிய பக்தர். அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது.

சாது:-கடைசியாக பைத்தியகாரனானதற்கு சந்தோஷிக்கிறேன. நாம் எல்லோரும் ஏன் கஷ்டப்பட வேண்டும், முட்டாள்கள்.

ஜனங்கள்:-நாங்கள் எல்லோரும் கஷ்டப்பட்டுத்தான் தீரவேண்டுமென்று எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். தாங்களும் கூட முன்னம் சொல்லி யிருக்கிறீர்கள், எழுதியிருக்கிறீர்கள்.

சாது:-அப்படியா.....நான் என்னுடைய பாட்டுகளைச் சுட்டுக்கொளுத்தி விட்டேன். பொய்யும் முட்டாள்தனமும்மோசமும்நிறைந்த முந்திய நாட்களைப் புதைத்து விட்டேன். என் வீட்டின் மேல் மாடியில் உட்கார்ந்து கொண்டு, பசியினால் வாடுகின்ற உலகத்தைப்பார்த்து அது ‘கடவுள் சித்தம்’, ‘கர்ம வினை’ என்று புலமை நிறைந்த பாட்டுகள் பாடுவதும், மற்றவர்கள் மிகவும் தாழ்ந்த நிலையிலும், நோயினால் வீடில்லாமலும், கந்தையோடும், பசி யோடும் வாடி வதங்குவதைப்பற்றியோசிப்பதும், ஒரு சிலரது சௌக்கியமான வாழ்க்கைக்கு நேர் விரோதமாயிருப்பதும், கடவுளது அறிய முடியாத திருவிளையாடல்களில் ஒன்றென எண்ணியதும் எல்லாம் மோசமும் பொய்யுமேயாகும்.

கடவுளைப்பற்றி நான் அவ்வளவு புகழ்ந்தெழுதியதற்குக் காரணம் சௌக்கியமான வீட்டில் வசித்து வந்தேன். காலந்தவறாது கவலையின்றி உணவருந்தினேன். புஷ்பங்களும், பறவைகளும் அழகானவையென்று நினைக்க சாவகாசமிருந்தமையால் அவைகள் அழகானவை என்று எண்ணினேன். கடவுள் என்றால் என்ன? கவலையற்ற சாப்பாடும், அதன் பின்னர் ஏற்படுகிற வேலையின்மையும் சேர்ந்து உண்டாகிற முடிவே.

நீங்கள் பல நாள் பட்டினி கிடந்தீர்களானால் கடவுள் காற்றாய்ப்பறக்கிறார். கடவுள் என்பது செல்வந்தர்களது பொழுது போக்கு என்பதும் ஏழைகளை நசிப்பிக்க சவுகரியமுமான போதை வஸ்து என்பதும் எனக்கு இப்போது தெரிய வந்தது. அவர்களுக்கு உணவில்லை, கடவுளில்லை.

ஒய்வில்லை, கடவுளில்லை, என்ற இந்த உண்மைகளை, வறியனாகி, அதிக துன்பங்களை அனுபவித்த பிறகே நான் அறிந்து கொண்டேன்.

ஓர் வயோதிகமாது:-நான் ஏழை, எப்போதும் ஏழை. ஆனால் கடவுளைப்பற்றி எண்ணம் உண்டாகிக் கொண்டேயிருக்கிறது. சாகின்ற நிலையிலுங்கூட அந்த எண்ணம் உண்டாயிற்றே.

சாது:-அது இயற்கைதான். ஒருசிலர் ஏனையோரை கடவுள் என்ற மதுவை உண்ணும் கெட்ட பழக்கத்தில் ஆழ்த்திவிட்டார்கள். இறக்கப்போகும் மனிதனைக்கூட குடிக்காமல் தடுக்க இயலாது. இந்தக்கொடிய பழக்கத்தைவிட ஒரேஒரு மருந்துதானுண்டு. அது தான் ஞானம்-உணவு, ஒவ்வொரு மனிதனின் உரிமை என்ற ஞானம். ஒவ்வொருவரும் அந்த உணவுக்காக பண்டியிட்டு வணங்குதலாகாது. ஆனால் சண்டையிட்டுப் பெற வேண்டுமென்ற ஞானம்.

ஜனங்கள்:-பெரியோர்களெல்லாம் அதற்காக வணங்கி, விரதமிருந்து தவமிருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களே.

சாது:-தெய்வ வணக்கம்......மது......ஆம் அதிக நாளாய் நாம் அந்த மயக்கத்தில் இருந்து விட்டோம். சகோதரர்களே! சகோதரிகளே! உண்மையாய்ச் சொல்லுங்கள். நீங்கள் வாழ்நாளெல்லாம் தெய்வ வணக்கம் செய்கிறீர்களே கடவுள் எப்போதாவது செவிசாய்த்து உங்கள் முறையீட்டைக் கேட்டதுண்டா? செல்வந்தர்கள் அதிகமாக கோவிலுக்குப் போவதையும் தெய்வத்தை வணங்குவதையும் பார்த்திருக்கிறீர்களா? அப்படிப் போனாலும் சகல ஆடம்பரங்களோடும் தங்களை ஏனையோர் நன்கு மதிக்க வேண்டும், கௌரவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடேயே போகிறார்கள் என்பதும் தாங்களறியீரா?

புரோகிதர்கள்:-அவனை (அந்த சாதுவை)ப் பிடித்து வெளியே தள்ளுங்கள். பைத்தியக்காரனைப் போல உளறுகிறான் அவன்.

சாது:-நாங்கள் பசியாய் இருக்கிறோம் உணவு வேண்டும் இந்தக் கல்லை (விக்ரகத்தை சுட்டிக் காட்டி) கேட்கிறோம். உம்மிடம் எங்களுக்குப் பேச்சில்லை.

புரோகிதர்கள்:- உன்னுடைய முட்டாள்தனத்தையெல்லாம் அவிழ்த்து விடாதே, அதிகப் பிரசங்கமடையா, மரியாதையாகப் போய் விடு, இல்லாவிடில் போலீஸ்காரரைக் கூப்பிடுவோம். நீ கடவுளையும் எங்களையும் அவதூறாய்ப் பேசுகிறாய்.

ஜனங்கள்:- அந்தோ! அநியாயம், அவரைப் பிடித்துக் கைதியாக்கி அடைத்து விடுவார்களே.

சாது:- அறியாமையிலும், மூட நம்பிக்கையிலும் உழலும் உங்கள் சிறையைவிட வேறு சிறை இருக்க முடியுமா? புரோகிதர்களே! நீங்களும் உங்கள் கடவுளும் பேடிகள். சக்தியற்றவர்கள். உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. போலீஸ் உதவி கொண்டு உங்களையும் உங்கள் கடவுளையும் காப்பாற்றிக் கொள்ளப் பார்க்கிறீர்கள்.

சாது:- பசியால் வாடும் ஜனங்களே! புரோகிதர்கள் பரம்பரை ஜாலவித்தைக்காரர்கள். உங்களுடைய அறியாமையையும், மூட நம்பிக்கையுமே கருவியாகக் கொண்டு அவர்கள் உங்களிடம் பணம் பறித்து உண்டு கொழுத்து வருகிறார்கள். இந்த ஜன்மத்தில் நன்மை செய்தால் அடுத்த ஜன்மத்தில் பலன் அநுபவிக்கலாம் என்கிறார்கள். முன் இறந்தவர்கள் யாராவது வந்து நம்மிடம் அதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்களா? அல்லது நாமாவது அறிய முடிகிறதா? கிடையவே கிடையாது. இன்று கஷ்டப்படுகிற நமக்கு இன்றே பரிகாரம் கிடைக்க வேண்டும். இல்லையேல் அது மோசமும், முட்டாள் நம்பிக்கையுமே யாகும். அதை நீங்கள் ஏன் நம்பவேண்டும்?

புரோகிதர்:- நாங்கள் உன்னை சபிக்கிறோம்.

சாது:- புரோகிதர்கள் ஆசீர்வதிக்க அறியார்களே!

புரோகிதர்:- நீ அதிகம் பேசினால் கடவுள் உன்னைக் கொல்வார்.

சாது:- உமது கடவுளை நான் கொல்லுகிறேன்பார்.

(சாது ஓரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து விக்கிரகத்தை உதைத்துத்தள்ள அதன் கீழ் தங்க நாணயங்கள் குவிந்து கிடக்கின்றன.)

வேதம் அல்லது பைபில் விதிகள்.

வினா:-பைபில் விதிகள் எவை?

விடை:-சமயாசாரியர்களால் தேவ வாக்கென மதிக்கப் படுவனவெல்லாம் பைபில் விதிகள் எனப்படும்.

வினா:-பைபில் விதிகள் ஆதி முதல் ஒரே மாதிரியாக இருந்து வந்திருக்கின்றனவா?

விடை:-இல்லை, ஆதிக்கிறிஸ்தவர்கள் எல்லாம் யூதர்களாயிருந்ததினால் பழைய ஏற்பாடே கடவுள் வாக்கு என்றும் கிறிஸ்து மதத்துக்கு அதுவே ஆதாரமென்றும் நம்பினார்கள்.

வினா:-இதைப்பற்றி அப்போஸ்தலகர்கள் என்ன சொன்னார்கள்?

புரோகிதர்கள்:- நாம் மோசம் போனோம், நமது ரகசியமெல்லாம் வெளியாய் விட்டன. நமது பிழைப்பே போய்விட்டது.

சாது:- (ஜனங்களைப்பார்த்து) இப்பொழுது உங்கள் கண்களினால் உண்மையைக் கண்டுணருங்கள். அதோ தங்க நாணயங்களைப் பாருங்கள்.

ஜனங்கள்:- ஆ என்ன ஆச்சரியம்! தங்க நாணயங்கள்!

சாது:- ஒவ்வொரு நாணயமும், நம்முடைய ரத்தத்தின் துளிகளாகும்.

சாது:- நீங்கள் வணங்கிய விக்ரகத்தின் கீழ் என்ன இருக்கிறது? உண்மையை இப்போது அறிந்தீர்களா? (மன மூடைந்த சிரிப்புடன் எல்லோரும் வெளியே வருகின்றனர்.)

விடை:-புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டைப்போல் முக்கியமானதென்று அவர்கள் நம்பவில்லையென்றே தெரிய வருகிறது.

வினா:-பழைய ஏற்பாட்டுக்கு சமமான நிலையில் புதிய ஏற்பாடு எப்பொழுது மதிக்கப்பட்டது?

விடை:-யூதக் கிறிஸ்தவர்களுக்கும் இதர கிறிஸ்தவர்களுக்கும் தகராறு ஏற்பட்டதினால் கத்தோலிக்க திருச்சபை ஸ்தாபனமாயிற்று. மத சம்பந்தமான விஷயங்களில்முடிவுகூற கத்தோலிக்க திருச்சபைக்கே அதிகாரமுண்டென மதிக்கப்பட்டது. எனவே பொதுவாக கடவுள் வாக்கென மதிக்கக் கூடிய ஒரு நூலுக்குத் தேவையுண்டாயிற்று. உடனே பல வேத விதிகள் தொகுக்கப்பட்டன. கடைசியில் அவை புதிய ஏற்பாடாக உருப்பெற்றன.

வினா:-இந்தப்புதிய ஏற்பாடு எப்பொழுது உருவாயிற்று?

விடை:-இரண்டாவது நூற்றாண்டின் பின் பகுதியில்.

வினா:-ஆதிவேத விதிகளில் அடங்கிய புஸ்தகங்கள் எவை?

விடை:-ஜஸ்டின், டெர்ட்டுலியன், இரேனியஸ், ஆரிஜென் முதலிய பாதிரிமார் ஒவ்வொருவரும் தனித்தனியாக அப்புத்தகங்களைப் பற்றி ஒரு பட்டியல் வெளியிட்டார்கள்.

வினா:-முரோடட்டரி வெளியிட்ட வேத விதிகள் எவை?

விடை:-அவை கி-பி 170-ல் வெளியாயிற்று. அதில் ஹிப்ருக்களுக்கு பால் எழுதிய கடிதங்களும் பீட்டர், ஜான், ஜேம்ஸ் வகுத்த விதிகளும் அடங்கியிருக்கவில்லை.

வினா:-சிரியன் வேத விதிகள் எவை?

விடை:-அதில் பீட்டரின் இரண்டாவது கடிதமும், ஜான் எழுதிய மூன்றாவது கடிதமும் அப்போஸ்தலர்கள் சட்டங்களும் தேவ வாக்குகளும் அடங்கியிருக்கவில்லை.

வினா:-தகராறில் இருந்து வரும் இதர பைபிள் நூல்கள் எவை?

விடை:-பால் கடிதங்கள், ஜேம்ஸ்கடிதங்கள், அப்போஸ்தலர்கள் சட்டங்கள் அடங்கிய புத்தகங்கள், பழைய ஏற்பாட்டிலுள்ள ஜாப் எஸ்தர் முதலியோர் வசனங்கள் முதலியன தகராறில் இருந்து வருகின்றன.

வினா:-லூதர் பைபில் என்றால் என்ன?

வினா:-தேவவாக்குகள் அடங்கிய புத்தகமும் ஜேம்ஸ் கடிதங்களும் மெய்யாகவேகடவுள் வார்த்தைகள்என்று லூதர் நம்பவில்லை.

வினா:-பைபில் விதிகளின் தற்கால நிலைமை என்ன?

விடை:-இங்கிலாந்து சர்ச்சு 39-வது விதி ஆறாவது பிரிவில் கூறப்பட்டிருப்பதாவது:—"பழைய புது ஏற்பாட்டு விதிகள் சந்தேகமற்ற ஆதாரங்கள் என வேத நூல்களின் பெயரால் ஒப்புக் கொள்கிறோம்." ஆனால் இது தெளிவில்லாததாகவும் தப்பு வழியில் செலுத்தக் கூடியதாகவும் இருக்கிறது. ஏனெனில் புதிய ஏற்பாட்டில் ஆட்சேபிக்கப்படாத பகுதி எதுவும் இல்லவே இல்லை.

வினா:-கத்தோலிக்க பைபில் புராடஸ்டன்று பைபிளுக்கும் பொருத்தமாக இருக்கிறதா?

விடை:-இல்லை. கத்தோலிக்க பைபிலில் கடவுள் வாக்காக மதிக்கப்படும் 72 புத்தகங்கள் அடங்கி யிருக்கின்றன.

வினா;-அது எப்படி?

விடை:-மத சம்பந்தமற்றவை என புராடஸ்டண்டுகள் நிராகரிக்கும் பலவற்றை கத்தோலிக்கர் தேவ வாக்கென நம்புகிறார்கள்.

வினா:-அந்தப் புஸ்தகங்களை கடவுள் வாக்கென மதியாதவர்களை கத்தோலிக்கர் எவ்வாறு நடத்துகிறார்கள்?

விடை:-டிரண்டில் கூடிய கத்தோலிக்கப் பாதிரி சங்கத்தார் அவர்கள் மீது ஒரு சாபம் பிறப்பித்திருக்கிறார்கள்.

வினா:-கத்தோலிக்க பைபில் எப்பொழுது மொழிபெயர்க்கப்பட்டது?

விடை:-நான்காவது நூற்றாண்டில் செயிண்டு ஜெரோமால் அது மொழிபெயர்க்கப்பட்டதென நம்பப்படுகிறது.

வினா:-அந்த மொழிபெயர்ப்பின் பெயர் என்ன?

விடை:-அதற்கு லத்தீன் வல்கேட்டு என்று பெயர்.

வினா:-கத்தோலிக்க பைபில் எப்பொழுதாவது திருத்தி எழுதப்பட்டதா?

விடை:-ஆம், பாப்பரசர்கள் 5வது சிக்டஸ்ஸாலும் 8வது கிளமெண்டாலும் திருத்தி எழுதப்பட்டது.

வினா:-தற்கால புராடஸ்டண்டு பைபில் எப்பொழுது மொழிபெயர்க்கப் பட்டது?

விடை:- 1611-ல் இங்கிலாந்து அரசர் ஜேம்ஸ் காலத்து மொழிபெயர்க்கப்பட்டது.

வினா:-அதற்குப் பிறகு அது திருத்தப் பட்டதா?

விடை:-ஆம். 1884-ல் ஒரு புது மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது.

வினா:-ஜேம்ஸ் அரசர் காலத்து வெளிவந்த மொழி பெயர்ப்புக்கும் இதற்கும் ஏதாவது வித்தியாச முண்டா?

விடை:-ஆம். வித்தியாசமுண்டு.

வினா:-வித்தியாசங்கள் எவை?

விடை:-ஜான் 1. V. 7-ல் "சுவர்க்கத்தில் மூவர் இருக்கிறார்கள். அவை பிதா, புத்திரன், தேவ ஆவி. அவை மூன்றும் ஒன்றே" திரிமூர்த்திக் கொள்கைக்கு ஆதாரமாகக் காட்டப்பட்ட இந்த வாக்கியம் புது மொழிபெயர்ப்பில் காணப்படவில்லை.

வினா:-வேறு வித்தியாச முண்டா?

விடை:-புது மொழிபெயர்ப்பில் மார்ஜினில் பொறிக்கப் பட்ட பல குறிப்புகளினால் இதுவரை மறுக்க முடியாத ஆதாரங்களாய் நம்பப்பட்டவைகளைப்பற்றி சந்தேகங்கள் உண்டாகின்றன.

வினா:-ஒரு உதாரணம் கூறு.

விடை:-மார்க்கு எழுதிய சுவிசேஷத்தில் கடைசி அத்தியாயத்தில் பின்வருமாறு ஒரு குறிப்புச் சேர்க்கப்பட்டிருக்கிறது. "மிகப் பழமையான இரண்டு கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளும் வேறு சிலவும் 9 வது வாக்கியத்திலிருந்து கடைசி வரை நிராகரித்து விட்டன" மற்றும் பின் வருமாறு

ஒரு குறிப்புச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ''வேத வாக்கியங்களில் பல பிரதி பேதங்களை மற்றும் சிலர் கூறுகிறார்கள்''

வினா:-அவ்வாறு நிராகரிக்கப்பட்ட வாக்கியங்கள் மிக முக்கியமானவைகளா?

விடை:-ஆம்: அவை இயேசு உயிர்த்தெழுந்ததைப் பற்றியும் சுவர்க்கம் சென்றதைப்பற்றியும் நித்திய நரக தண்டனையைப் பற்றியும் கூறுகின்றன.

வினா:-அந்தக் குறிப்புகளினால் என்ன ஊகிக்கக் கிடக்கின்றன.

விடை:-மொழி பெயர்ப்பாளர் பல கையெழுத்துப் பிரதிகளிலிருந்து கடவுள் வார்த்தைகளைப் பொறுக்கி எடுத்தார்களென்று ஊகிக்க இடமிருக்கிறது

வினா:-வெளிவந்துள்ள மொழி பெயர்ப்புகள் இவ்வளவுதானா?

விடை:-பிரமாணமாக ஒப்புக் கொள்ளப்பட்ட பைபில்கள் சரியல்லவென்று நம்பி வேறு பல பண்டிதர்கள் பலமொழி பெயர்ப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

வினா:-புராடெஸ்டண்டுகளும் கத்தோலிக்கரும் பைபிலை ஒரே மாதிரியாக மதிக்கிறார்களா?

விடை:-அவர்கள் இருவரும் ஒரே மாதிரியாக மதிக்கவில்லை

வினா:-வித்தியாசத்தை விளக்கு.

விடை:-கடவுள் வார்த்தைக்கு மகிமையும் அதிகாரமும் கற்பிப்பது திருச்சபையே என்று கத்தோலிக்கர் நம்புகிறார்கள்.

வினா:-அதற்கு அவர்கள் கூறும் நியாயம் என்ன?

விடை:-அகஸ்தியன் வார்த்தைகளை அவர்கள் ஆதாரமாகக் காட்டுகிறார்கள். ''நான் அறிந்த விஷயங்களை விட

அறியாத விஷயங்கள் பைபிளில் ஏராளமாக இருக்கின்றன" என்று அவர் கூறியிருக்கிறாராம். ஒரு பாஷியகாரர் உதவியின்றி அவருக்கே கடவுள் வார்த்தைகளை உணரமுடியாதானால் சாமானியருக்கு எப்படி முடியுமென்று கத்தோலிக்கர் கேட்கிறார்கள்.

வினா:-பைபிளுக்கு இதரர் கூறும் வியாக்கியானங்களை கத்தோலிக்கர்கள் நம்புகிறார்களா?

விடை:-அவர்கள் நம்பவில்லை.

வினா:-ஜனங்கள் பைபில் வாசிப்பதை அவர்கள் ஆதரிக்கிறார்களா?

விடை:-பிஷப்பின் அநுமதியின் பேரிற்றான் ஜனங்கள் பைபில் வாசிக்கலாமாம்.

வினா:-பைபிலைப் பற்றி புராடஸ்டண்டு கொள்கை என்ன?

பைபில் சரியான கடவுள் வார்த்தை என்றும் அதை ஒவ்வொருவரும் வாசித்துப் பொருளுணர வேண்டுமென்றும் புராடஸ்டண்டுகள் கூறுகிறார்கள்.

வினா:-தவறு செய்யக்கூடியமக்கள் தவறில்லாத பைபிலை எப்படி வாசித்துப் பொருளுணர முடியும்?

விடை:-தேவ ஆவி உண்மைப் பொருளை எல்லோருக்கும் விளக்கிக் கூறுமென்று சொல்லப்படுகிறது.

வினா:-தேவ ஆவி எல்லோருக்கும் ஒருப் போலப் பொருளை விளக்கிக் கூறுகிறதா?

விடை:-இல்லவே இல்லை. பைபில் வாக்கியங்களுக்குப் பலதிறப்பட்ட பாஷியங்கள் இருக்கின்றன.

வினா:-ஞானஸ்நான விஷயத்தில் புராடஸ்டண்டுகளெல்லாம் ஒற்றுமையான அபிப்பிராயமுடையவர்களாயிருக்கிறார்களா?

விடை:-இல்லை.

வினா:-தேவ சங்கற்ப விஷயத்தை எல்லாரும் ஒப்புக் கொள்கிறார்களா?

விடை:-இல்லை.

வினா:-நித்திய நரக தண்டனையை எல்லாரும் நம்புகிறார்களா?

விடை:-இல்லை.

வினா:-பாவமன்னிப்பு எல்லாருக்கும் உடன்பாடு தானா?

விடை:-இல்லை.

வினா:-இயேசு தேவகுமாரன் என்று எல்லோரும் நம்புகிறார்களா?

விடை:-இவ்விஷயங்களைப் பற்றி யெல்லாம் தேவன் கூறியிருப்பதாக ஒப்புக் கொண்டாலும் இயேசு தேவ குமாரன் என்று எல்லோரும் நம்ப வில்லை.

வினா:-இவ்விஷயங்களைப் பற்றி தேவன் சந்தேகத்துக்கு இடமின்றிக் கூறியிருந்தால் கிறிஸ்தவர்களுக்குள்ளே அபிப்பிராய பேதமிருக்க இட முண்டா?

விடை:-இல்லை.

வினா:-அபிப்பிராய வித்தியாச முடைய மத வாதிகளுக்குள் சமரசம் ஏற்பட வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

விடை:-பழைய வேத வாக்கியங்களை யெல்லாம் விளக்கி தேவன் மீண்டு மொரு முறை கூற வேண்டும்.

வினா:-பைபில் தேவ வாக்கு என்பதை ஆட்சேபிப்பதேன்?

விடை:-பைபில் தேவ வாக்காயிருந்தால் உண்மை ஒரு குலத்தாருக்கே உரியது என்று ஏற்பட்டு விடும்.

வினா:-வேறு ஆட்சேபணை யுண்டா?

விடை:-ஆராய்ச்சிக்கே தேவையில்லை யென்று ஏற்பட்டு விடும்; புது உண்மைகளை அடக்க பாதிரிமாருக்கு அதிகா

ரம் கிடைத்துவிடும்; விசால புத்தியுடையவர்களை அவர்கள் ஹிம்சிக்கத் தொடங்கி விடுவார்கள்.

வினா:-இதைப்பற்றி சரித்திரம் என்ன சொல்லுகிறது?

விடை:-அறியவேண்டியவையெல்லாம் குர்ஆனில் அடங்கி யிருப்பதினால் அலக்சாண்டரியா நூல் நிலையத்தைஎரித்துச் சாம்பலாக்க உமார்கட்டளையிட்டானாம். அதுபோலவேபைபி லில்எல்லா உண்மைகளும் அடங்கி யிருப்பதாக நம்பி கத்தோலிக்கர் கிரேக்க ரோம நாகரிகத்தை எதிர்த்துப் போராடி அடியோடு ஒழித்தார்கள். தற்காலத்து விஞ்ஞான சாஸ்திரி களும் புது விஷயங்களைக் கண்டு பிடிப்பவரும் அவிசுவாசி கள் எனப் பழிக்கப்படுகிறார்கள்.

வினா:-இந்த திருஷ்டாந்தங்களினால் நாம் முடிவுகட்ட வேண்டியதென்ன?

விடை:-வேதங்கள் மக்கள் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டை என்றுதான் முடிவுகட்ட வேண்டும்.

வினா:-பைபிலைப் பற்றி ஐரோப்பாவிலும் அமெரிக் காவிலும் இப்பொழுது எத்தகைய அபிப்பிராயம் இருந்து வருகிறது?

விடை:-அறிவு விளக்கம் பெறாத ஆதி கால மக்கள் எழுதிய நூல் என்ற அபிப்பிராயமே இருந்து வருகிறது.

வினா:-பைபிலை யாராவது தேவ வாக்கென மதிக்கி றார்களா?

விடை:-கல்வியறிவில்லாதவர்கள் மதிக்கிறார்கள்.

வினா:-பைபிலினால் உபயோகமென்ன?

விடை:-பைபில் வாக்கியங்களில் ஒப்புக்கொள்ளத்தக்க வைகளை ஒப்புக்கொள்ள வேண்டும். மற்றவைகளைத் தள்ள வேண்டும்.

ஆண் பெண் சமத்துவம்.

ஆண் மக்கள் தங்களுடைய பெண் மக்களை அதாவது தாங்கள் மிகுதியும் மரியாதை செலுத்தும் தாய்மார்களாயிருந்தாலும் சரி, அன்பு செலுத்தும் சகோதரியாயிருந்தாலும் சரி, காதலுக்குரித்தான மனைவிகளாயிருந்தாலும் சரி. ஒரே படியாக அவர்களைக் கேவலமாகவே எண்ணியும், மதித்தும் வருவது சகஜமாக இருந்து வருகிறது. நமது நாட்டில் வெகுகாலமாக இம்மாதிரி பெண்களை இழிவாகக் கருதப்படுவதற்கு நமது சாஸ்திரங்களும், பண்டிதப் பெரியோர்களும், முற்றும் துறந்த முனிவர்களென்று சொல்லப்பட்டவர்களும் ஒரு வித காரணமுமின்றி பெண்களைக் கேவலமாக வர்ணித்து வந்ததோடு, பாரபக்ஷமாக ஏட்டிலும் எழுதிவைத்திருக்கின்றனர். இதைப் படிக்கும் மக்கள் சாதாரணமாக தங்கள் பகுத்தறிவைக் கொண்டே ஆராயாமல் தங்கள் பெண்மக்களைக் கேவலமாக நடத்தி வந்ததோடு அவர்களுக்கு எவ்விதத்திலும் சமத்துவம் ஏற்படாதபடி சட்ட திட்டங்களையும் செய்து அதைப் பழக்கத்திலும் கொண்டுவந்து விட்டார்கள். இந்தப் பழக்கமானது இந்தியர் ஒவ்வொருவருடைய மனதிலும் ஆழமாகப் பதிந்து விட்டது. சுயமரியாதை இயக்கத்தின் பலனால் மக்கள் சிறிது சிறிதாக உண்மையை உணர்ந்து வருகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஆண் பெண் சமத்துவத்தைப் பற்றி மேனாட்டு மனோதத்வ நிபுணர்கள் செய்யும் முடிவையும் நாம் பெரிதும் கவனிக்க வேண்டியது அவசியம்.

ஆடவர்கள் சாதாரணமாகப் பெண்களை "பேதையர்க"ளென்று அழைப்பதில் எவரும் பின் வாங்குவதில்லை. அடுப்பங்கரையில் சட்டி சுரண்டும் அம்மையர்களைத்தான் இவ்வாறு கூறிவிடுகிறார்களென்றாலோ தற்கால படிப்புப் படித்து ஆண்களைப் போலவே பி. ஏ., எம். ஏ., பட்டம் பெற்றவர்களையும் கூட "எப்படியிருந்தாலும் பெண்புத்தி பின் புத்தி தானே; பேதமை என்பது மாதர்க்கணி கலன்" என்று அலட்சியமாகக்கூறி விடுகிறார்கள்.

இதைப்போல் பாமர மக்கள் கூறுவதுதான் ஒருபுறமென்றால்படித்த ஆண்களும் இவ்வாறு கூறுவதற்கு கூச்சமடைவதில்லை. அவர்கள் கூறுவதெல்லாம் என்ன? பெண்களுக்கு 'மூளையில்லை' என்பதுதான் பொதுவானது. இது மனிதனுடைய பழக்க வாசனையா, அல்லது இயற்கைவாசனையா என்று கூட நாம் சில சமயங்களில் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. என்றாலும் இது ஒரு அலட்சிய புத்தியினாலும், தற்பெருமையினாலும் நாளா வட்டத்தில் நிலைபெற்று விட்ட ஒரு தப்பபிப்பிராயமென்றே கூறவேண்டும். இக்காரணத்தினாலேயே அவர்களை அலட்சியம் செய்து சரியான கல்வியை அளிக்காமல் இருந்து விட்டார்களெனக் கூறலாம். பெண்கள் புத்தியில்லாதவர்களென்று பொதுவாகக் கருதப்படுவதால் ஒவ்வொரு ஆடவரும் தங்கள் பெண்டிர்க்கு எல்லா விஷயத்திலுமே தங்களுடைய "புத்திசாலித்தனமான" யோசனைகளைக் கூற முன் வந்து விடுகிறார்கள், சமைக்கின்ற வேலை முதற்கொண்டு வீட்டு வேலைகள் சகலமும் சேர்த்துப் பிள்ளை பராமரிப்பு வரையிலும் கூட விஷயங்கள் தங்களுக்கு எந்த விதத்திலும் அனுபோகமில்லாதிருந்தும் கூட தங்களுக்கு அதிக புத்தியுண்டு என்கின்ற ஒரு தற்பெருமையினால்—எதையும் யூகித்து சொல்லக்கூடிய திறமை உண்டென்கின்ற அசட்டுத்தைரியத்தால்தங்கள் யோசனையைப் பெண்களுக்குக்கூற முன்வந்துவிடுகிறார்கள். இந்தசம்பவமானது எந்தக்குடும்பத்திலும் சகஜமானதென்றாலும் அவர்கள் அப்படிக்கூறும் சந்தர்ப்பங்கள் நேரும்போதெல்லாம் குடும்பத்திற்குள் கொஞ்சம் "முறு முறுப்பு" ஏற்படாமல் போவதில்லை. சாதாரணமாக வீட்டிலுள்ள பெண்டிர் அந்த "நிபுணத்தனமான" யோசனையை எதிர்த்துக் கண்டிக்காமல் விடுவதில்லை. சில சமயம் ஆத்திரம் பொங்கி தாங்கள் எப்பொழுதும் காட்டும் அடக்கத்தையும் கூட மீறி "நீங்கள் பேசுவது இன்னதென்றே புரியாமல் பேசுகிறீர்கள்; உங்கள் வேலையைப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கூடச் சொல்லி விடுவார்கள். ஆடவர் தற்பெருமைக்குச் சிறிது ஆட்டங்கொடுத்தாலும்தனதுபிடிப்பை விடுவதில்லை. ஏனெனில் தன் பெண்ஜாதியைவிட இல்லை, மற்ற எந்தப் பெண்களையும் விடவே தனக்கு "அதிகமான மூளை" இருப்பதாகவே அவரது எண்ணம். அதோடு அதை "நிரூபித்து" காட்டக்கூடமுடியுமென்று கூறுவார்கள். அதற்கு உதாரணங்களின் மேல் உதாரணம் எடுத்துக்காட்டுவார்கள். எது எப்படியிருந்தாலும் இவர்கள் இம்மாதிரியாக தம்பெண்

ஜாதிகளுக்கு குடும்ப விஷயத்தைப்பற்றி யோசனை கூறப் போகும் போதெல்லாம் "முறுமுறுப்பு" ஏற்படுவதற்குக் காரணந்தான் என்னவென்று யோசித்தாலோ இவர் கூறும் 10 யோசனைகளில் 9 7/8 யோசனைகள் சரியாகயிருப்ப தில்லை. ஆனால் இவர் யோசனை சரியென்று இவர் திரு பிப்பதற்கு பேசுகின்ற பேச்சோ ஊரை வளைக்கும்; ஆடு கின்ற ஆட்டமோ சொல்ல முடியாது. மற்ற உப அங்கங்க ளுக்கும் குறைவிருக்காது. இருந்தும் என்ன பயன். சில சமயம் இவர் கூறப்புறப்படும் யோசனைகள் யாவுமே பிச காய்ப்போய் விடுவதுண்டு.

ஆனால் அவர்கள் சச்சரவு எப்படியிருந்தாலும் இருந்து போகட்டும், மனோ தத்வ நிபுணர்கள் இது விஷயமாக என்ன கூறுகிறார்களென்றாலோ பெண்டிர்க்கும் "சரியான மூளை உண்டு" என்கிறார்கள். இது உத்தேசமென்றோ, கிட்டத் தட்ட என்றோ, வேறு சித்தாந்தமென்றோ சொல்லி விட முடியாது. அவர்கள் கோடியாகச் சோதித்துப் பார்த்து ஆராய்ந்தறிந்து கண்டறிந்த முடிவுண்மைகளாகும். அமெ ரிக்காவிலே ஒரு கல்லூரியிலுள்ள 115 ஆண்களையும், 111 பெண்களையும் எடுத்துக்கொண்டு அவர்களுடைய புத் தித்திறமையைப்பற்றி வெகு கவனமாக சோதனை செய்து பார்த்ததில் சராசரியாக பெண்களுக்கும் சரி, ஆண்களுக்கும் சரி, சமத்துவமாக 142 மார்க்குகள் கொடுத்தார்களாம். அதை விடுத்து பல பிரபல்யமான கல்லூரிகளிலுள்ள எல்லோரையும் ஒன்று சேர்த்து மொத்தம் 3175 ஆண்களையும், 1575 பெண்களையும் சோதித்துப்பார்த்ததில் அவர்களுடைய கல்வி த்திறமையானது 'ஏ' கிரேடு, 'பி' கிரேடு முதலிய இரண்டுமே சேர்த்து ஆண்களுக்கு 100க்கு 75. 4 மார்க்குகள் என்றும், பெண்களுக்கு 100க்கு 75. 2 மார்க்குகள் என்றும் முடிவிற்குவந் தார்களாம். அமெரிக்காவில் ஹோர்வார்டு பல்கலைக்கழகமா னது சற்று மேல் தரமான கல்லூரி. இதனுடைய மாணவர்க ளையும், உயர்தாரட்கிளிப்பெண் கல்லூரியிலுள்ள மாணவிக ளையும் சோதித்து சில மாதங்கள் அவர்களுடைய அறிவுத்தி றமையை ஆராய்ந்து பார்த்ததில் ஒருமாணவனும், ஒருமா ணவியும் மாத்திரம் முதல் தரமானவர்களென்று தேர்ந்தெ டுக்கப்பெற்று அவர்களுக்கு 86o/o மார்க்குகள் நிர்ணயிக்கப் பட்டது. ஒரு ஹார்வார்டு மாணவர் எல்லோரையும் விட நிரம்பத்தாழ்ந்ததான 8% மார்க்கு வாங்கினதைப்பற்றி யாவ ரும் ஆச்சரியப்படநேர்ந்தது. ஆனால் வெகு குறைந்த மார்க்

குகள் வாங்கின, பெண்மணிகள் மாத்திரம் 28% மார்க்குக்கு குறையாமல் வாங்கியிருக்தார்கள். பொதுவாக எல்லோரையும் சேர்த்து சராசரி பார்த்தபொழுது மாணவர்களுக்கு 100க்கு 50. 5 ஆகவும், மாணவிகளுக்கு சராசரி 100க்கு 55 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. இதில் பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையே அறிவு, திறமை இவைகளில் அதிகமான வித்தியாசங்கள் இருக்கவில்லை என்பது திட்டமாகத் தெரிகிறது. மற்றும் அவரவர்களுக்கு இட்ட வேலைகளில் சிறிதும் ஏற்றத்தாழ்வு கூற முடியாதபடி திறமையாகவே நடத்தக்கூடிய ஆற்றல் உண்டென்று தெரிகிறது.

இப்பொழுது நாம் சாதாரணமாக உலகத்திலேயே உள்ள ஆண், பெண்களையும் எடுத்துக்கொண்டோமானாலும், திறமை சாலிகளான பெண்கள் சராசரியில சமத்துவமாகவே தோன்றியிருப்பதாகக் கண்டு கொள்ளலாம். ஆண்களுக்குப் பிறகு எவ்வளவோ காலத்திற்குப்பின்னால் பெண்கள் தங்கள் சுதந்திரங்களைப்பெற்றிருந்தாலும் இந்தக்குறுகிய காலத்திற்குள் நல்ல புகழ்பெற்ற ஆசிரியைகளும், நடிகர்களும், பிரசங்கிகளும், வர்த்தகம் முதலான துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களும், எண்ணிக்கையில் கூடுமான வரையில் வீதாச்சாரத்திற்குக் குறையாதென்பது திண்ணம். இந்தியாவின் பெண்கள் சுதந்திரமோ வெகுகாலமாகத் தடுக்கப்பட்டிருந்தும் அவர்களிலும் புகழ் பெற்றவர்களும், அறிவிலும், ஆற்றலிலும், ஆண்களோடு சமத்துவமாக வைத்துப் போற்றக்கூடிய இயல்புடையவர்கள் எத்தனையோ பேர் இந்த குறுகிய காலத்திற்குள் தோன்றியிருக்கிறார்களென்பதையும் கண்டு கொள்ளலாம்.

இதனால் ஆண்களுக்கும், பெண்களுக்கும் உள்ள சமத்துவமானது ஒரே தன்மையிலென்பதாக தவறுதலாகக் கொள்ளக்கூடாது. அவர்கள் ஆண்களுக்குச் சமத்துவமான துணைவர்களே ஒழிய, அதாவது தன்மையில் வேறுபட்டாலும் ஒவ்வொருவருக்குமுள்ள திறமையில் அவரவர்கள் சமத்துவமென்று சொல்ல வேண்டியிருக்கிறதே ஒழிய ஆண்களைப் போன்ற நகல்கள் என்று கூறுவதல்ல. இருபாலர்களுக்கிடையே அவசியமான வித்தியாசங்கள் உண்டு. அவர்களுடைய மனோபாவத்தில் தெளிவாக வித்தியாசப்படுகிறார்களென்பதாக புரொபசர் எட்வர்ட்டி தான் டைட் என்ற மனோதத்துவ சாஸ்திரி கூறுகிறார். பெண்களானவர்கள் பாஷாவித்வத்திலும், சரியான ஞாபக சக்தியிலும், கிரகிக்கும்

தன்மையை யுடையவர்களென்றும், ஆண்களோ சரித்திர ஆராய்ச்சியிலும், உள் உணர்ச்சியிலும், தேக பலத்திலும், ரசாயன சாஸ்திரங்களிலும் பெருமையாய் இருப்பதோடு நுணுக்கமான வேலைகளிலும் திறமைசாலிகள் என்றும் கூறுகிறார். ஒவ்வொரு பாலாருக்கும் இம்மாதிரியான, இயல்பான குண குணங்கள் தனித்தனியாக இருக்கிறதென்பதை உணராமல் ஆண்களுக்குள்ள அறிவுத்திறமையில் பெண்கள் குறைவானவர்கள் என்ற முடிவுக்கு வருவதானது ஒரு பெரியதவறு. ஒரு பிரபல விஞ்ஞான சாஸ்திரியானவர் விஞ்ஞான ஆராய்ச்சியைப் பற்றி வியாசம் தயாரிக்கும்போதெல்லாம் அடிக்கடி தன் பக்கத்திலுள்ள 13 வயதுடைய மகளை தனக்குச் சந்தேகமாய் இருக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் எழுத்துக் கூட்டுதலைக் கேட்டுக் கொண்டு எழுதுவாராம். இந்தப் பெண் சாதாரணமாகப் பள்ளி மாணவியாயிருந்தும் விஞ்ஞான கலை சம்பந்தமான வார்த்தைகளைக் கூட பிழையில்லாமலும் தயக்கமின்றியும் எழுத்துக் கூட்டிச் சொல்லும் வழக்கமுண்டாம். அப்படிச் சொல்லும் பொழுதெல்லாம் அந்தப் பெண் குழந்தையானது தனக்கு இருக்கும் ஞாபகசக்தி கூட தந்தையாருக்கு இல்லாதிருப்பதைப் பற்றிப் பெரிதும் வியப்புறுவாளாம்.

ஒவ்வொரு குடும்பத்திலும், வீட்டு ஆண்களுக்கு பாட்டனார் திதி எப்பொழுது, அமாவாசை எப்பொழுது, தான் ஊர் போய் வந்தது எப்பொழுது என்பதான வெகு சாதாரணமான விஷயங்களைக் கூட எந்தத் தேதியிலென்பது கூட ஆண் மக்களுக்கு ஞாபகம் வருவதில்லை. குடும்பத்தில் நடந்த எந்த சந்தர்ப்பங்களைப் பற்றியும் சரியானபடி எந்த தேதியில் நடந்தது என்று சொல்லவும் முடியாது. தன்னுடைய பவுண்டன் பேனாவை எங்காவது வைத்து விட்டு வீடெல்லாம் தேடித் திரிவார்கள். ஆனால் வீட்டிலுள்ள பெண்களோ எதுவாயிருந்தாலும் மறக்காமல் ஞாபகத்தோடு சொல்வதும், எடுத்துக் கொடுப்பதும், ஞாபகமூட்டுவதும் வெகு சகஜமான தென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். மேனாட்டிலோ தற்சமயம் பெரும்பாலான பெண்கள் தங்கள் பாஷா ஞானத்தின் திறமையை யாவருக்கும் திடுக்கிடும் படியான விதத்தில் பிரத்தியட்சத்தில் காட்டி வருகின்றார்கள். முற்காலத்தில் எப்படி இருந்தது என்பதை இப்பொழுதும் நாம் கவனிக்க விட்டு விட்டே பார்த்தாலும் 100க்கு 30 பேர்கள் வரையில் உலகத்தில் புகழ் பெற்ற பேராசிரியர்களாய்

இருப்பவர்கள் பெண்களென்றே சொல்ல வேண்டும். இங்கிலாந்தில் நூல் வல்லார்களெல்லாம் பெண் மணிகளே, பிரான்சில் எத்தனையோ நூலாசிரியர்களும் நடிக நாடகத்தில் பேர் போனவர்களும், அரசியல் நிபுணர்களும் பெண்களாக இருந்திருக்கின்றனர். இத்தாலியிலிருந்தும், ஜர்மனியிலிருந்தும் எவ்வளவோ சங்கீத சாகித்யத்தில் பேர் போனவர்களெல்லாம் தோன்றியிருக்கின்றனர் அமெரிக்காவில் எவ்வளவோ சமூக சீர்திருத்தத்தில் புகழ் பெற்ற பெண்களைக் காணலாம். இன்னும் அநேக தொழில்களிலும் ஈடுபட்டு இருக்கின்றார்களெனினும் சமூக சீர்திருத்தத்தில் முனைந்து நிற்பவர்கள் பெண்கள் தான் அதிகமெனலாம். வர வர அமெரிக்கப் பெண்கள் அரசியல் விஷயத்திலும் புகுந்து யாவருடைய போற்றுதலையும் பெற்று வருகின்றனர். சமீப காலத்திற்கு முன்தான் விஞ்ஞான சாஸ்திர வழிகளிலும் தங்களுக்குத் திறமையுண்டென்று பெண்கள் அறியத் தொடங்கினார்கள். சென்ற ஜனக் கணிதத்திலிருந்து விஞ்ஞான ரசாயன சாஸ்திர ஆராய்ச்சியிலும் முனைந்து நிற்கும் பெண்கள் 10 வருடங்களுக்குள்ளாக இரட்டிப்பாக அதிகரித்திருக்கின்றார்களென்று தெரிகிறது. இப்பொழுது அமெரிக்காவிலே 10 வருடங்களுக்கு முன் 400 பேர் இருந்த விடத்தில் இப்பொழுது 3000 பெண்கள் பிளான் வரைவதில் திறமைசாலிகளாகவும், பெண் கல்லூரித் தலைவிகளாகவும் பேராசிரியர்களில் 1000க்கு மேற்பட்டவர்களும், 2000 ஜட்சுகளும், லாயர்களில் சுமார் 5000 வரையிலும் பெண்கள் இருப்பதாகவும் தெரிகிறது. பாங்கு உத்தியோகத்தில் முக்கிய ஸ்தானங்கள் வகித்து வருபவர்கள் மாத்திரம் 4000 க்கு மேற்பட்டவர்களென்று தெரிகிறது. பெண்கள் டாக்டர்களாகவும், நர்சுகளாகவும், பாதிரிமார்களாகவும் எத்தனையோ 1000 பேர்கள் இருப்பதாகவும் தெரிகிறது. இவற்றையெல்லாம் கொண்டு நாம் என்ன முடிவிற்கு வர முடிகிறதென்றால் அவர்களுக்கு எந்த விஷயங்களிலும் ஆண்களைப் போன்ற திறமை உண்டென்றும் ஆனால் அவர்களுக்கு முன்னிருந்த சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு அவர்களுடைய திறமையைக் காட்ட ஒட்டாதபடி செய்ததே ஒழிய அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டால் அவர்களுடைய போக்கில் நல்ல திறமையைக் காட்டக் கூடுமென்பதாகவே நாம் கருத வேண்டியிருக்கிறது.

ஒரு காலத்தில் ஆண்களுடைய மூளையைவிட பெண்களுடைய மூளை அளவில் சிறியதாக இருந்திருப்பதால் புத்

தியில் பெண்கள் குறைந்தவர்கள் என்று கருதப்பட்டது. ஆனால், உடற்கூறுசாஸ்திரிகளும் மனோதத்துவசாஸ்திரிகளும் மூளையினுடைய அளவில் உள்ள வித்தியாசத்தைக் கொண்டு புத்தியை நிர்ணயிக்க முடியாதென்றும், பெரிய மூளைகளை விட சிறிய மூளைகளிலே தான் அதிலும் பெண்களுடைய மூளைகளிலே அதிகமான "நியூரோன் செல்கள்" இருப்பதாகவும், செல்களுடைய எண்ணிக்கைக்கு தகுந்த விதத்திலே தான் புத்தியின் அளவும் இருக்கிறதென்றும், ஆதலால் சாதாரணமாகப் பெண்களும், ஆண்களும் சமத்துவமான அறிவு பலம் உடையவர்களென்று முடிவு கட்டி இருக்கின்றனர். ஆனால், ஆண்கள் எப்பொழுதும் தங்கள் மனைவிக்கு "மூளை இல்லை" யென்று அடிக்கடி ஏன் சொல்லுகிறார்களென்று யோசித்துப் பார்க்குமிடத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் மனப்போக்கும், குணப்போக்கும், உணர்ச்சிப்போக்கும் வித்தியாசப்பட்டு இருப்பதினாலேயே யென்பதை கவனிக்க வேண்டியது. இவற்றை அளவிடுவதற்கு நிபுணர்களாலேயே பெரிதும் கஷ்டமாயிருக்கிறது. அவர்களுக்கு உணர்ச்சியும், உற்சாகமும் புத்திப் போக்கு, மதாபிமானம், இரக்கம், பொறுமை, கூச்சம், நாணம் முதலியவைகளான குணங்கள் அதிகமாயிருந்து வருகின்றன. ஆண்களோ, சுயேச்சையிலும், தீவிரத்திலும் உள் உணர்ச்சியிலும், சேவைகளிலும் அதிகமான போக்குடையவர்களாய் இருந்து வருகிறார்கள். இந்த அளவு கூட சராசரி என்று தான் கொள்ள வேண்டி இருக்கிறதே ஒழிய தனித் தனியாகவும் கூற முடியவில்லை. ஏனெனில் சில ஆண்கள் குழந்தைகளிடத்தில் பெண்களைவிட அதிகமான ஆர்வத்தைக் காண்பிக்கின்றனர். சில பெண்கள் ஆண்களைப்போல திடமும், தீவிரமுள்ளவர்களாகவு மிருக்கிறார்கள். பெண்களானவர்கள் ஒரு ஆசாமியினுடைய தோற்றத்தைக்கொண்டே நிர்ணயிக்க முற்படுகிறார்கள். ஆனால் ஆண்கள் உண்மை நிகழ்ச்சிகளைக்கொண்டே தங்கள் அபிப்பிராயங்களை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆண்களானவர்கள் ஒருவர் செய்த காரியத்தைக் கொண்டே அவர்களை மதிக்கின்றார்களே ஒழிய அவர்களுடைய குணாகுணங்களைக் கொண்டோ, அந்தரங்க நடவடிக்கைகளைப் பற்றியோ கவலைப்படுவதில்லை. மனிதஸ்பாவத்தை சம்பந்தப் பட்டு எந்த விஷயங்களையும் பெண்களுக்கு யூகித்து உணர்வதற்கான நுட்ப அறிவானது ஆண்களை விட அதிகமாகவே இருக்கிறது. இதற்கு உதாரணமாக, ஒரு ஆணா

னவன் எவ்வளவு தான் தன் மனைவியோடு பழகி இருந்தாலும் அவளுடைய குணா குணங்களை சரிவர அறிந்து கொள்வதற்கு சக்தியில்லாமலிருக்க, ஒரு மனைவி தான் பழகிய புருஷனின் குணா குணத்தை சிறு காலத்திற்குள் அவனைப் பற்றி அவனே உணர்ந்திருப்பதை விட அதிகமாக உணர்ந்திருக்கிறாள்.

எவ்வளவு காரணங்கள் இதைப்போல் சொன்னாலும் ஆண்களுக்கு மாத்திரம் பழக்க வாசனையால் ஏற்பட்ட ஒரு அபிப்பிராயமானது திருந்துவதற்கு வெகு நாட்கள் பிடிக்கும்போல் தோன்றுகிறது. இருந்தாலும் இதற்கு முக்கியமான காரணம் குடும்பத்தில் சச்சரவு ஏற்படாமல் சமாதானம் நிலைவேண்டுமென்று பெண்கள் நினைத்துத்தங்கள் ஆண்மக்களுக்கு அடிக்கடி எந்த விஷயத்திலும் விட்டுக்கொடுத்து விடுவதினாலேயே பெண்களைப்பற்றி சர்வ சாதாரணமாக சமத்துவமில்லாதவர்களென்று எண்ணம் தோன்றுவதற்கு இடமாயிருக்கிறது. மேலும், அவர்கள் சுதந்திரத்தோடு தங்களுடைய சுய சம்பாத்திய முயற்சியினால் வாழ்ந்து காட்ட வேண்டுவதும் அவசியமாயிருக்கிறது. பெண்கள் தங்கள் ஜீவனத்திற்கு ஆண்களை எப்பொழுதும் எதிர்பார்த்து நிற்பதானது அவர்களை ஆண்களுக்கு சமத்துவமானவர்களாய்ச் செய்ய முடியாமலிருக்கிறது. பெண்கள் அறிவுத்திறமையில் சமத்துவமானவர்களாயினும் புத்திப் போக்கில் மாத்திரம் வேறுபட்டவர்களாய் இருக்கிறார்களாதலால் அவர்கள் இருவரும் சமத்துவமானவர்களென்பதோடு இவர்கள் இருவருடைய குணாகுணங்களும் ஒத்து நின்று ஒரு காரியம் நடத்துவதாலேயே வாழ்க்கையும்இன்பமும் ஏற்பட முடியுமென்பதையும் திண்ணமாய் உணர வேண்டும்.

“பிரிட்டிஷ் ஆட்சியானது, எப்படியிருந்த போதிலும், அது பார்ப்பனீய ஆட்சியைவிட, அதுவும்தோழர் காந்தியார் “ராமராஜ்ய” ஆட்சியை விட மோசமானதல்ல”

ஈ. வெ. ராமசாமி.

கண்டறிந்த உண்மை.

(ஜி. இங்கர்சால்.)

ஆயிரக்கணக்கான வருஷங்களாக, மனிதன் பசிப்பிணியைப் போக்கிக் கொள்ளவும், தனக்கு வேண்டிய அவசியமான காரியங்களைச் செய்து கொள்ளவும் ஆலோசனை செய்து அறிவை பெருக்கிக் கொண்டான். ஆனால் அறியாமையும், பயமும், தவறுதல்களும் அவனுடைய முன்னேற்றத்தைத் தடை செய்தன. அனேக வருஷங்களாக மனிதன் உண்மையைக் காணப் பாடுபடுகிறான். அவன் மதக்குருக்கள்களாலும், மதத்தலைவர்களாலும் ஏமாற்றப்பட்டான் அவன், குருக்கள்களால் கைவிடப்பட்டான். பேய் பிசாசுகளால் பயமுறுத்தப்பட்டான். அரசனால் தண்டிக்கப்பட்டான். "கடவுளால்" அடக்கி ஆளப்பட்டான், கல்வியின் பேரால் அவனுடைய மனம் அறியாமையில் அழுத்தப் பட்டது. இயற்கைக்கு மேற்பட்டதொரு வழியில் செலுத்தப்பட்டது. மதம் அவனுக்கு அறியாமையையும் அகங்காரத்தையும் போதித்து அன்பையும், வெறுப்பையும் அவசியமானதென்று வற்புறுத்தியது.

ஆனால், உலகம் காலப்போக்கில் மாறுதலடைகிறது. நாம் அநாகரிகமான வேதபுத்தகங்களையும், அர்த்தமற்ற கோட்பாடுகளையும் வெறுக்கிறோம்.

இத்தகைய அறியாமைக்கிடையிலே உண்மையைக் கண்டுபிடிப்பதை விட உயர்ந்த காரியம் வேறொன்றுமில்லை.

உண்மையே மனிதர்களுக்கு உதவும் உயர்ந்த செல்வம்.

உண்மையை நாடுவதே உலகத்திலுள்ள வேலைகளினெல்லாம் யோக்கியமானது, பயன் தருவது.

உண்மையே முன்னேற்றத்திற்கு முக்கியமான அஸ்திவாரம்; உண்மையே இன்பத்தின் தாய். உண்மை நம்மை

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நாகரிகர்களாக்குகிறது. மனிதன் இதயத்தில் இருக்கும் அதிஉயர்ந்த ஆசைகளில் முதன்மையானது; உண்மையை அறிந்து கொள்வது. உண்மை மனிதனுக்கு அளவற்ற சக்தியைக் கொடுக்கிறது. மனிதனைக் காப்பாற்றும் சக்தியும் கேடயமும் உண்மையேயாகும். உண்மையை அறிந்த மனிதன் உலகத்தை சீர்திருத்துகிறான்.

ஆலோசனையாலும், அனுபவமான ஆராய்ச்சியாலும் தான் உண்மையைக் காண முடியும். மனிதன், தன்னாலியன்ற மட்டும், ஆராய அனுமதிக்கப்படவேண்டும். ஒவ்வொன்றும் அவனுக்குத் துணைசெய்ய வேண்டுமே யல்லாது ஒன்றும் அவனைத் தடை செய்யலாகாது. அறிந்துகொள்ள முடியாத விஷயம் ஒன்றும் இருக்கக்கூடாது. ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே ஆராய்ச்சி செய்யவும் தனது உள்ளத்தில் பட்டதை வெளியிடவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

எவனொருவன் ஆராய்பவனை பயமுறுத்துகிறானோ அவன் ஜனசமூகத்துக்கு விரோதி. மனிதனிடமிருந்தும் "கடவுளிடமிருந்தும்" சுதந்திரம் பெற்றால் தான் நாம் ஆராய முடியும். ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தானே உண்மையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனது மனமாகிய ஆராய்ச்சிசாலையில், உலகிலுள்ள பல்வேறு கொள்கைகளை ஆராய வேண்டும். அவன் ஆராய்ந்தறிந்த உண்மையே அவனுக்கு வழிகாட்டியாயிருக்க வேண்டும்.

உண்மையை நேசிப்பதே உன்னதமான குணம். உண்மையை நேசிப்பதே மனுஷத்தன்மையாகும். உண்மையை நேசிப்பதே சுதந்திரம் அடைவதற்கான ஒரு சிறந்த வழியாகும். கோவில்களுக்கும், குருக்கள்களுக்கும் 'கடவுள்'களுக்கும் பயப்படுவது அடிமையாவதற்கு வழி தேடுவதாகும். ஆராய்வது ஒவ்வொருவருக்கும் அவசியமாயிருப்பதோடு, அது அவர்களின் கடமையாகவுமிருக்கிறது. ஆராய்ச்சியை அவன் பொன்னே போல் போற்ற வேண்டும். விருப்பு, வெறுப்பற்ற தன்மையில் இருந்து கொண்டு அவன் ஆராய வேண்டும். உண்மையைக் கண்டு பிடிப்பதே அவனுடைய முக்கியமான நோக்கமாக விருக்க வேண்டும். ஆலோசித்துப் பார்ப்பானானால் உண்மை தவறான வழியில் செல்லாதென்பதை அவன் அறிந்து கொள்வான். அவன் பழமை என்பதற்

காகவோ, பழக்கம் என்பதற்காகவோ ஒன்றும் கவலைப்படக் கூடாது. அறிவிற் பட்டதையன்றி வேறொன்றையும் அவன் நம்பக்கூடாது. அவனுடைய உலகத்தில் அவன் அதிபதியா யிருக்க வேண்டும். அவனுடைய அரசாங்கத்திலிருந்து அவன் பேய் பிசாசுகளையும், கடவுளையும் விரட்டியடிக்க வேண்டும்.

அகங்காரம், ஆணவம், வெறுப்பு, பயம் ஆகியவைக ளெல்லாம் உண்மையின் விரோதிகள். உண்மையாக ஆராய் பவன், பழமையானதென்பதற்காகவே பழைமையை போற்ற மாட்டான். புதுமையானதென்பதற்காகவே புதுமையை வெறுக்க மாட்டான். இறந்து போய் விட்டார்களென்பதற் காக அவன் அவர்களின் கொள்கையைப் போற்றமாட்டான். உயிருடன் இருக்கிறார்களென்பதற்காக அவன் இவர்களின் கொள்கையை வெறுக்க மாட்டான். கருத்தை நோக்குவானே யல்லாது அவன் கர்த்தாவை கவனிக்க மாட்டான். உண்மை யற்றவர்களுக்குத் தான் வெளி வேஷம் வேண்டும். உண்மை யற்றவைகளுக்குத் தான் உலகத்தில் மெஜாரிட்டி இருக்கும். உண்மையான ஒருவனுக்கு உள்ளதை ஒளிக்காமல் சொல்லு கிறவனுக்கு உலகத்தில் மெஜாரிட்டி இருப்பதில்லை. அவர்கள் உண்மையென்று படுவதை நம்புகிறார்கள். அவர் கள் பிறருக்காகவாவது, முன்னோர்களுக்காகவாவது, பழக்க வழக்கத்துக்காகவாவது ஒன்றையும் நம்புவதில்லை. ஒவ் வொரு வழியிலும் அவர்கள் உண்மையைத் தேடுகிறார்கள். உண்மையைக் கண்டால் ஆனந்தத்தோடு அதை வரவேற்கிறார் கள். இந்த உண்மைகளை அறிஞர்களும், யோக்கியர்களும் அனுசரிக்கிறார்கள். ஏனெனில் அதை விட வேறொரு வழி அவர்களுக்கில்லை. ஒவ்வொரு துறையிலும் மனிதன உண் மையையே நாடுகிறான். இறந்த காலத்தில் நடந்த தவறு களை எதிர்காலத்தில் நடவாமல் தடுப்பதற்காக ஒரு அரசியல் வாதி உலக சரித்திரத்தை வாசிக்கிறான். ஏனெனில் அவ னுடைய தேசத்தைக் காப்பாற்ற அவன் உலக உண்மையை அறிந்துகொள்ள நாடுகிறான்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தனனுடைய உண்மையான எண்ணங்களை வெளியிட தைரியமிருக்கவேண்டும். இவ்வித தைரியமே ஒருவனை உண்மைத் தியாகியாக்குகின்றது. யார் உண்மையான எண்ணங்களை வெளியிடாமல் தடுக்கின்றார் களோ அவர்கள் உண்மைக்கும் நாகரிகத்துக்கும் விரோத

மானவர்கள். தனது எண்ணத்தை மட்டும் வெளியிடுவதில் சுதந்திரம் கொண்டாடி அச்சுதந்திரத்தை பிறருக்கு மறுப்பானாகில் அவனைவிட அயோக்கியன் வேறொருவருமில்லை. சில கொள்கைகள் தெய்வீகம் பொருந்தியவையென்றும், அவைகளை ஆராய மனிதனுக்கு உரிமை இல்லையென்றும் சொல்லுவது சரியல்ல. அவைகள் தெய்வீகம் பொருந்திய தென்பதை அவர்கள் எவ்வாறு அறிந்தார்கள். அநேக ஆண்டுகளாக பேச்சு சுதந்திரம் "கடவுளுக்கு" இன்னலை விளைத்து வந்தது. அக்காலத்தில் உண்மையைச் சொல்லுவதைவிட பெருங்குற்றம் வேறொன்றுமில்லை. அநேக வருஷங்களாக அறிஞர்களின் வாய் அடைபட்டிருந்தது. ஆண்மையுடன் ஒளிவீசிக்கிளம்பிய இயக்கம் இரத்தத்தினால் அடக்கி ஒடுக்கப்பட்டது. உண்மை சுதந்திரத்தை நாடுகிறது. சுதந்திரம் எப்பொழுதும் ஆராய்ந்தறியச் சொல்லுகிறது. சுதந்திரம் ஆராய்ச்சி ஆகிய இவைகளின் உதவியால் தான் உண்மை நிலை நிற்கிறது. உண்மை களங்கமற்ற தன்மையையே விரும்புகிறது. உண்மை அகங்காரத்தையும் ஆணவத்தையும் அடக்கி அறிவின் ஆராய்ச்சியைப் பெருக்குகிறது. உண்மை மனிதனை ஒளித்துவாழச் சொல்லவில்லை; உண்மை அறியாதவர்களின் வணக்கத்தையும் பயந்தவர்களின் பிரார்த்தனையையும் விரும்பவில்லை. உண்மை ஒவ்வொருவருக்கும் "ஆராய்ந்து பார்" என்று சொல்லுகிறது. இயற்கை அனுபவிக்கும் சுதந்திரத்தை நீங்கள் அனுபவியுங்கள். உண்மையை வெளியிடும்படியான தெய்வீகத் தன்மையை அடையுங்கள்.

நாம் ஏன் உண்மையைப் பின்பற்ற வேண்டும்? நாம் எதற்காக ஆராய வேண்டும்? நாம் ஏன் யோக்கியனாக விருக்க வேண்டும்? நாம் எதற்காக உண்மையான எண்ணங்களை ஒளிக்காமல் வெளியிட வேண்டும்? இவைகளுக்கு நாம் ஒரு பதில் தான் கூற முடியும். ஜன சமூகத்தின் நன்மைக்காகவே அறிவு விருத்தியடைய வேண்டும். உலகம் ஆராய வேண்டும், பேச்சு சுதந்திரம் வேண்டும். பேதையை ஒரு குணமல்ல வென்பதை உலகம் அறிந்து கொள்ள வேண்டும்.

இத்தகைய வழிகளால் மனிதன் இயற்கையை வெல்ல முடியும், பிணியைப் போக்க முடியும், துன்பத்தை நீக்க முடியும், இவ்வுலக வாழ்க்கையை இன்பமானதாகச் செய்ய முடியும், குடியிருக்க வீடும், உடுக்க ஆடையும், உண்ண உண

வும் அனுபவிக்க, சுகபோகங்களும் ஒவ்வொருவருக்கும் குறைவறக் கொடுக்க முடியும்.

இத்தகைய வழிகளால் குற்றங்களையும் குறைகளையும் உலகத்தை விட்டு விரட்டி விடலாம். பயமாகிய பேயையும், மூடநம்பிக்கையாகிய பிசாசையும் உலகத்தை விட்டகற்றி விடலாம். ஒவ்வொரு மனிதனையும் அறிவுள்ளவனாகவும், யோக்கியமுள்ளவனாகவும் செய்து விடலாம்.

''கடவுள்'' தனது சிம்மாசனத்திலிருந்து இறங்கி விடுவார். நரகம் இல்லாதொழிந்து போகும். வேஷதாரிகளெல்லாம் உண்மையானவர்களாகி விடுவார்கள். மதம் பயத்தைப் பரப்பாது, பொய் நல்ல குணமாக விருக்காது. தெய்வீகம் பொருந்திய செயல்கள் ஒன்றுமிருக்காது. ஒவ்வொரு மனிதனும் கடவுளாகிய கல்லை நேசிப்பதை விட உயிருள்ள மனிதனை நேசிக்கத் தொடங்குவான். இவ்வுலக வாழ்க்கைக்காகவே மனிதன் ஒவ்வொரு செயலையும் செய்வான்.

சுதந்திரத்துக்கு விரோதமாகப்பேசப்படும் பேச்சையும் சுயமரியாதைக்கு விரோதமாகச்செய்யப்படும் தர்க்கத்தையும் என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.

''உண்மையான மனித சமுதாய சீர்திருத்த வேலையை ரஷியாவில் லெனின் செய்தார். தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கம் செய்கிறது. மற்றவர்கள் தனிப்பட்ட சமூக சுயநல வேலையையும், விளம்பரம்பெறும் வேலையையும், கூலிப்பிழைப்புவேலையையுமே செய்கிறார்கள்''

ஈ. வெ. ரா.

''மத நூல்கள் யாவும் மனிதனுடைய சுயமரியாதைக்கு முரணானவைகள்''

சர். ஆர். கே. ஷண்முகம்.

மாதர் முன்னேற்றத்துக்கு மதம் முட்டுக்கட்டை

பழக்க வழக்கங்கள் பெண்களை அடிமைப் படுத்துகிறது.

[தோழர் பி. செந்தாபாயின் அறிவுரை.

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் ஆதரவில் தோழர் பி. செந்தாபாய் பேசியதாவது:—

தோழர்களே!

பெரும்பாலும இந்துமத சமூகத்தில் பெண்களாய் பிறந்தோர் பாப ஜென்மங்களாய் கருதுகிறபடியால் அவர்கள் இறந்தொழியும் வரையில் கொடுமை சூழ்ந்தவர்களாக வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே, அவர்கள் முன்னேற்றத்தையும், சமத்துவத்தையும் நாடும் நாம் பொதுவாக கவனிக்க வேண்டியனவும் சில உண்டு என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

அவை யாவை என்றால் பகுத்தறிவுக்கு இடந்தாரது, அறியாமையை வளர்த்து மக்களின் முன்னேற்றத்தைப் பல விதத்திலும் தடைப்படுத்திவரக் காரணமாயிருப்பவை எவை என்று பரிசீலனை செய்வதேயாம். அக்காரணங்கள் ஒழியும் வரை சமூக சீர்திருத்தமாவது, மகளிர் முன்னேற்றமாவது ஏற்படாதென்பதே எனது முழு நம்பிக்கையாகும். அக்காரணங்கள் எவையென்றால் ஆன்ம நம்பிக்கையும், கடவுள் நம்பிக்கையும் உள்ள மதங்களே என்பது மறுக்கப்படாத உண்மை. அவ்வித மதங்களே பெண் மக்களையும் அடிமை வாழ்க்கைக்குட்படுத்த ஆதாரமாயிருந்ததென்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

இளம் பெண்கள் மணம் கூடாதென்று நிறைவேறி உள்ள சாரதா சட்டத்தை எதிர்த்துப் போராடி வருவது எது?

பெண்கள் 10 வயதுக்குள்ளே மணக்க வேண்டுமென்பதே தருமமென்றும், ருது மதி விவாகம் செய்வது பாவம் என்றும் விதித்திருப்பதெது? பெண்கள் மறுமணம் செய்யக்கூடாதென்றும், கணவராகிய "பதி" இறந்த பின் அவர் ஆத்மா மோக்ஷமடைவதற்காக விரதமாகிய நோன்பை அனுசரித்து நடக்க வேண்டியவள் மனைவியாதலின் பதிவிரதை என்னும் பெயரைப் பெற்றாளென்று கூறி கொடுமைக்குட்படுத்தி வருவது எது? நமது இந்து மதமல்லவா? ஆடு, மாடு, வஸ்திரம் முதலிய பொருள்களை மற்றைபோருக்குத் தருமம் கொடுப்பது போல் பெண் மக்களையும் தருமம் கொடுக்கும் பொருளாகக் கருதி கன்னிகாதானம் செய்து வருவதும் எது? நமது இந்து மதமல்லவா? பெண்கள் களிம்புள்ள செம்புக்கும் ஆண்கள் களிம்பில்லாத பொன்னுக்கும் சமானமென்று வைதீகக் கூட்டத்தினர் சூத்ரமிட்டதற்கும் காரணம் இந்து மதமல்லவா? அந்தோ! பெண்கள் ஆண்களாகவும், ஆண்கள் பெண்களாகவும் மாறக் கூடியனவாகவே மனிதருடைய அங்கவியல் அமைந்திருக்கிறதென்பதை மேல் நாட்டு விஞ்ஞான சாஸ்திரிகள் பிரத்தியட்சமாக விளக்கிக் காட்டும் இந்த இருபதாம் நூற்றாண்டில் செம்பென்றும், பொன்னென்றும் பிதற்றும் வைதீக குப்பைகளுக்கு இடம் எங்கிருக்கிறதென்று கேட்கிறேன். அவ்வித அறியாமைக்கெல்லாம் ஆத்ம நம்பிக்கைக்குரிய மதங்களே காரணங்களல்லாமல் வேறல்ல.

அக்கால ஆண் மக்களின் அறியாமையால் ஏற்பட்ட தவறுதலே தவிர உண்மையில் பெண் மக்கள் எவ்விதத்திலும் இளைத்தவர்கள் அல்ல என்பது திண்ணம்.

நண்பர்களே! என் அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்ல எனக்கு இச்சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொடுத்த இளைஞர் மன்றத்தாருக்கும், என் சொற்பொழிவை பொறுமையுடன் கேட்டிருந்த பெரியார்களுக்கும் என் நன்றியைத்தெரிவித்துக் கொண்டு இத்துடன் என் சிற்றுரையை முடித்துக் கொள்ளுகிறேன். என பேசி முடித்தார்.

சிறந்தமுறை! குறைந்தவிலை!! நிறைந்த நணம்!!!

வியாபாரிகளுக்கு தக்ககமிஷன் கொடுக்கப்படும்.

அரை அவுன்சு புட்டி 1-க்கு விலை அணா 0—6—0.

6 அணாவுக்கு வி பி எடுப்பது சிரமமாகுமாதலால் 9 அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு புட்டி அனுப்பப்படும்.

"கோவில்வழிபாடு மக்கள்பக்தியை வளர்க்க வென்றால், அதற்குச்செய்யும் பணச்செலவுயார்வயிற்றை வளர்ப்பதற்கு?"

பி. சிதம்பரம் பிள்ளை

"அரசியல் வாழ்வு என்பது அயோக்கியர்கள் வயிற்றுப் பிழைப்பு. அரசியல் சீர்திருத்தம் என்பது அயோக்கியர்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை."

ஈ. வெ. ரா.

"பகுத்தறிவு"

பகுத்தறிவு பத்திரிகையின் முதல் ஆண்டின் பன்னிரண்டு பிரதிகளையும் சேர்த்து இரண்டு புத்தகங்களாக சாதாரண பைண்ட் செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் சொற்ப காப்பிகளே கைவசம் இருக்கின்றன. ஆர்டருக்கு முந்துங்கள்.

பகுத்தறிவு சந்தாதாரர்களுக்கு ரூ 1—0—0
மற்றவர்களுக்கு 1—8—0

மானேஜர்
பகுத்தறிவு, ஈரோடு

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

சந்தாவில் ஆதாயம்

பிந்துபவர்களுக்கு சென்ற வருடம் போல் முந்திய இதழ்கள் கிடைக்காமல் போகும்படி நேரும்.

பகுத்தறிவும் குடிஅரசும்
2-ம் சேர்த்து வரவழைக்கும்
சந்தாதாரர்களுக்கு ஜூலை மீ வரையில்

உள்நாட்டுக்கு வருஷ சந்தா 3—8—0
வெளி நாட்டுக்கு 5—8—0

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ...	...	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம் ...	... ...	,,	0 3 0

அறிஞர் சார்லஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை	...	,,	0 5 0

Hon. பேர்ட்ரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ...	...	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன?	...	,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ...	...	,,	0 3 0
கடவுள்	...	,,	0 5 0
நான் சமூகவாதியானதேன்? ...	...	,,	0 3 0
வால்டேர்	...	,,	0 4 0
பேய்-பூதம்-பிசாசு ...	...	,,	0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ...	...	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி	...	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி	...	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும்	I-ம் பாகம்		0 6 0
ஷை	II-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரண சாசனம்			0 4 0
ஷை	2-ம் பாகம்		0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது

பெண்ணுரிமையும் மதமும் ...	...	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு")	...	,,	0 5 0
ஷை காலிகோ பயிண்டு	...	,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நா. பி.)			0 4 0

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11	தர்ம பரிக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	வேதமோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	ஈ. வெ. ரா சீர்திருத்த மகாநாட்டு உபன்யாசம்	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0.	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19	சுயமரியாதைத் தாலாட்டு	0	2	0
20.	பர்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
21.	சோஷியலிசம்	0	2	0
22.	போல்ஷ்விக் முறை	0	1	0
23.	ஈ. வெ. ரா. இலங்கை உபன்யாசம்	0	0	9
24	கத்தோலிக்கர் வீண் கூச்சல்	0	0	6
25.	சமதர்ம உபந்யாசம்	0	0	.6
26.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
27.	மனுநீதி விளக்கம்	0	2	0
28.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
29.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
30.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
31.	புராண ஆராய்ச்சி-தக்க ஆதாரங்களுடன்	0	8	0
32.	சர்ப்ப ஆட்சி	0	6	0
33.	ராவணப் பெரியார்	0	5	0
34.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai vilakam Press.